Registered as a NewsPaper

விலை ரூபா : 8.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள்-12

நாதம் 16 | திருவள்ளுவர் ஆண்டு 2036 | ஆனி-29 | 13-07-2005 | புதன்கிழமை | ஓசை-145

கணேசா நகையகம்
தங்கநகை உலகில் நம்பிக்கை நாமம் பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி, வவுனியா.
T.P.-024-2222464
இல:94, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
T.P.-021-2225987
(சி-12149)

## காந்தரூபனின் 15ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வில் தேசியத்தலைவர் பங்கேற்று நினைவு கூர்ந்தார்!



கடற்கரும்புலி மேஜர் காந்தரூபனின் 15ஆம் ஆண்டு நினைவு நாள் நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் பங்கேற்று நினைவுகூர்ந்தார்.

காந்தரூபன் அறிவுச்சோலையினரும், செஞ்சோலையினரும் இணைந்து நினைவு கொண்ட இந்நிகழ்வின் ஆரம்பத்தில் பொதுச்சுடரினை சோதியா படையணி சிறப் புத்தளபதி கேணல் துர்க்கா ஏற்றிவைக்க, தமிழீழத் தேசியக்கொடியினை மாலதி படை யணி சிறப்புத்தளபதி கேணல் விதுசா ஏற்றி வைத்தார் அதனைத்தொடர்ந்து கடற்கரும்புலி கள் மேஜர் காந்தரூபன், கப்டன் கொலின்ஸ், கப்டன் வினோத் ஆகியோரின் திருவுருவப் படங்களிற்கு அரசியல்துறைத் துணைப்பொறுப் பாளர் சோ.தங்கன் ஈகச்சுடரினை ஏற்றி வைக்க, கடற்றொழிலாளர் சமாசங்களின் இணைப்பாளர் மோகன் மலர்மாலைகளை அணிவித்தார்.

அறிவுச்சோலை மாணவர்களின் இசை நிகழ்வும், உடற்பயிற்சி கண்காட்சியும் வெளி அரங்க நிகழ்வாக நடைபெற்று உள் அரங்க நிகழ்வாக காந்தரூபன் அறிவுச்சோலை செஞ்சோலை மாணவமாணவி களின் கலை நிகழ்வுகள் நடைபெற்றன. அதன்போது காந்தரூபன் அறிவுச்சோலை மாணவர்களால் உருவாக்கப்பட்ட "இளங் கதிர்" என்னும் நூலினை அறிவுச்சோலை மாணவன் வழங்கி வைக்க தேசியத்தலைவர் அவர்கள் பெற்றுக்கொண்டு சிறப்பித்தார்.

# திருமலையில் பூரண ஹர்த்தால்

# மாவீரர்களுக்கு மக்கள் இறுதி அஞ்சலி!

## ஆலங்குளம் துயிலும் இல்லத்தில் வித்துடல்கள் விதைப்பு

(திருகோணமலை)

**உப்புவெளிப் பகுதியில் இரண்டு போராளிகள், தேசிய துணைப்படைவீரர் மற்றும் நாட்டுப்பற்றாளர் என நான்கு பேர் இராணுவத்தினரால் படுகொலை செய்யப்பட்டதைக் கண்டித்து நேற்று திருமலையில் பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. அத்துடன் இம் மாவீரர்களுக்கு பெருமளவான பொதுமக்கள் அஞ்சலி செலுத்தியதுடன் வித்துடல்கள் ஆலங்குளம் மாவீரர் துயிலுமில்லத்தில் பூரண இராணுவ மரியாதையுடன் விதைக்கப்பட்டன.**



திருகோணமலை மாவட்டம் உப்பு வெளியில் சிறிலங்காப் படையி னரின் சதியால் கடந்த ஞாயிற்றுக் கிழமை வீரச்சாவைத்தழுவிக் கொண்ட போராளிகளான டிக்கான் மற்றும் இளம்புலி, துணைப்படை வீரர் அனுசன் குலசிங்கம் ஆகிய மாவீரர்களின் வித்துடல்கள் நேற்று ஆலங்குளம் மாவீரர் துயிலுமில லத்தில் பூரண இராணுவ மரியாதை யுடன் புனித விதைகுழியில் விதைக் கப்பட்டன.

திருக்கோணமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி. எழி லன் தலைமையில் இந்த இறுதி நிகழ்வுகள் நடைபெற்றன. முதலில் சேனையூர் மத்தியகல்லூரியிலும், சம் பூர் மகாவித்தியாலயத்திலும் போரா ளிகள் மற்றும் பொதுமக்களின் அஞ் சலிக்காக வித்துடல்கள் வைக்கப்

(12ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் இருவேறு தாக்குதல்கள் 14 சிறிலங்காப் படையினர் காயம்!

(திருமலை)

திருகோணமலையில் நேற்று ஒரு துப்பாக்கிச் சூட்டுச்சம்பவமும் கைக்குண்டுத் தாக்குதல் சம்பவமும் இடம்பெற்றதாகப் பொலிசார் தெரி வித்தனர். இரு சம்பவங்களிலும் சிறிலங்கா இராணுவ சிப்பாய் ஒருவரும் பதின்மூன்று பொலிசாரும் காயமடைந்தனர். காயமடைந்த பொலிசாரில் மூவர் ஆபத்தான நிலையில் இருப்ப

(12ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தநிறுத்தம் கேள்விக்குறியாகிவிட்டது இழப்பை இனியும் அனுமதிக்க முடியாது

-வீரவணக்க நிகழ்வில் எழிலன் தெரிவிப்பு

(திருமலை)

"யுத்த நிறுத்தம் என்பது இன்று கேள்விக்குறியாகிவிட்டது. யுத்த நிறுத்த உடன்படிக்கையின் பிரகாரம் அரசின் கட்டுப்பாட்டுப்பகுதிக்குள் அர சியல் நடவடிக்கைகளை மேற்கொள் ளும் நிராயுதபாணிகளான விடு தலைப்புலிகளுக்கு பாதுகாப்பு அளிப் பதற்கு அரசு தவறிவிட்டது". இவ் வாறு திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப்பொறுப்பாளர் சி.எழி லன் ஞாயிறு உப்புவெளியில் படுகொலை செய்யப்பட்ட போராளி களின் வித்துடல்களுக்கு திருமலை முற்றவெளியில் நடைபெற்ற வீர வணக்க நிகழ்வில் பங்குபற்றி பேசும் போது தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

எழிலன் மேலும் தெரிவிக்கை யில் "சிறிலங்கா கடற்படையினரால் கைதுசெய்யப்பட்ட கருவண்ணனை விசாரித்த இராணுவப்புலனாய்வுத் துறையினர் டிக்கானையும், வேறு மூன்று போராளிகளையும் கொல் வோம் என்று அச்சுறுத்தி இருந்தனர். மூன்று வாரங்கள் கழித்து டிக்கான் கொல்லப்பட்டுள்ளார். திருமலையில் இப்போது இராணுவத்தினர் தீவிர தேடுதல் நடவடிக்கைகளை வீதித் தடைகளை ஏற்படுத்தி மேற்கொண்டு வரும் நேரத்தில் ஆயுதக்குழு

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க வின் 'மக்கள் சக்தி' பேரணியில் பெருமளவில் திரண்ட மக்கள் கூட்டம்!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் மக்கள் சக்தி நடவடிக்கையின் இறுதிநாளான நேற்றும்பெரும்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

கொழும்பில் நடைபெற்ற இந்த மக்கள் சக்தி நடவடிக்கையின் இறுதி நாள் நிகழ்வில் எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ரவி கருணாநாயக்க, மிலிந்த மொறகொட உட்பட பல முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டமைப்பு அரசாங்கத்தை வீட் டிற்கு அனுப்புவோம் என்ற தொனிப் பொருளில் கடந்த இரண்டாம் திகதி தெய்வேந்திரமுனை சிறிவிஷ்னு தேவாலயத்தின் முன்பு ஆரம்பமான இந்த மக்கள் சக்தி நடவடிக்கையின் பதினொராவதுநாளும், இறுதிநாளு மான நேற்று தெகிவளை யில் ஆரம்பமான பேரணி கொழும்பு லிப்ரன் சுற்று வட்டத்தை சென்ற டைந்தது பொதுக்கூட்டத்துடன் முடி

(12ஆம் பக்கம் பார்க்க)

# தாக்குதல் நடத்தப்பட்டதன் நோக்கம் யுத்த நிறுத்தத்தை சீர்குலைப்பதேயாகும்

## கண்டன அறிக்கையில் கூட்டமைப்புத்தலைவர் சம்பந்தன்

செல்வநாயகபுரத்தில் விடுதலைப் புலிகள் தங்கிருந்த இடத்தின் மீது இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் இரு போராளிகள். உட்பட நால்வர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தைக் கண்டித்து, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்றக் குழுவின் தலைவரும் திருகோணமலை மாவட்டப்பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, நிராயுதபாணிகளான இரு விடுதலைப்புலிப் போராளிகளும் மற்றும் இருவரும் ஞாயிறு உப்புவெளி பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்ட பாரியசம்பவம் ஒனறு இடம்பெற்றது. தாக்குதலில் இன்னொரு பொதுமகன் பலத்த காயங்களுக்கு ஆளானார்.

சூட்டுச் சம்பவம் நடைபெற்ற இடத்துக்கு செல்லும் பாதை, வெளியேறும் பாதை பொது வீதியில் அமைந்துள்ள படையினரின் பல சோதனைச் சாவடிகளைத் தாண்டியே அமைந்துள்ளது. அவ்வாறான பாதுகாப்பு ஒழுங்குகள் திருகோணமலையில் அண்மைக் காலமாகப் பலப் படுத்தப்பட்டுள்ளன.

இத்தாக்குதல் அரச கட்டுப் பாட்டுப் பகுதியிலேயே இடம்பெற்றுள்ளது. தாக்குதல் நடத்தப்பட்டதன் நோக்கம் யுத்த நிறுத்தத்தைச் சீர் குலைப்பதேயாகும். இவ்வாறன தாக்குதல்களில் அரச படையின் ஒருசிலபிரிவினர் வெளிப்படையாக சம்பந்தப்பட்டிருப்பது, யுத்த நிறுத்தத்தை கடைப்பிடிப்பது தொடர்பான அரசாங்கத்தின் உறுதிப்பாட்டின் நேர்மையை கேள்விக்குறியாக்கியுள்ளது. இவ்வாறன தொடரும் தாக்குதல்கள் மீட்டெடுக்க முடியாத பாதிப்பை யுத்தநிறுத்தத்திற்கு ஏற்படுத்தக்கூடிய சாத்தியத்தைக் கொண்டுள்ளன.

இவ்வாறான சம்பவங்கள் தொடர்ந்து இடம்பெறுவதைக் தடுப்பதை உறுதி செய்யக்கூடிய விதத்தில் ஆகக்கூடிய சாத்திமான நடவடிக்கைகளை மேற்கெள்ளும் தனது கடப்பாடு குறித்து அரசாங்கம் அக்கறையற்று இருக்க முடியாது. யுத்தநிறுத்த உடன்படிக்கையின்படி அவ்வாறு நடக்க வேண்டிய கடப்பாடு அரசாங்கத்திற்கு உண்டு சமாதான நடைமுறை முறிவடையாமல் இருப்பதை உறுதிப்படுத்துமுகமாக அவ்வாறு செயறபட வேண்டிய கடப்பாடும் அரசாங்கத்திற்கு உண்டு. இவ்வாறான தாக்குதல்களில் அரசாங்கமும் உடந்தையாக உள்ளது என்ற கருத்தை நீக்கும் நடவடிக்கையை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறது. இவ்வாறான தாக்குதல்களை முடிவுக்குக் கொண்டுவருவதை உறுதிசெய்யும் நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்று கூட்டமைப்புக். கோருகின்றது இவ்வாறு சம்பந்தன் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## வரி விளம்பரம்

### காணிவிற்பனைக்குண்டு

இல. 79.B. 1ஆம் குறுக்கு, 8ஆம் வாய்க்கால் உருத்திரபுரம். குடியிருப்புக் காணி 1/2 ஏக்கர், 22 அடி விட்டக்கிணறும், வீடும், தென்னை, பனை, மாமரம்என்பன உண்டு. வயல்நிலம் 2 1/2 ஏக்கர் இரண்டு போகஞ் செய்யக்கூடியது. தொடர்பு திரு.R. சிறிகாந்தன் 210 ஜெயந்திநகர், கிளிநொச்சி. (6187)

## தமிழீழப் போக்குவரவுக் கழகம் சிட்டை ஆய்வாளர் பணிக்கான நேர்முகத்தேர்வு

சம்பளத்திட்டம்:-

3630-4730 / 10x110 +2700.00=6,330.00+சிறப்புக் கொடுப்பனவு 4,000.00=10,330.00

மேற்படி சம்பளத்திட்டத்தில் சிட்டை ஆய்வாளர் பணிக்கு விண்ணப்பம் செலுத்தியவர்களுக்கான நேர்முகத் தேர்வு 15.07.2005 ஆம் நாள் வெள்ளி காலை 09.00 மணி தொடக்கம் பகல் 02.00 மணிவரை விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகில் உள்ள பணிமனையில் நடைபெறும்.

மேற்படி பணிக்கு விண்ணப்பம் செய்தோர், கல்வித்தகைமை, அகவை ஆகியவற்றினை உறுதிப்படுத்தும் உரிய ஆவணங்களுடன் வருகை தருமாறு வேண்டுகின்றோம்.

முகாமையாளர்
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப் போக்குவரவுக்கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

(சி-12322)

## தவறவிடப்பட்டது

முல்லைத்தீவு இலங்கைவங்கியின் முகாமையாளர் க.இலட்சுமண சர்மா ஆகிய எனது சிறிய கைப்பை 11.07.2005 அன்று காலை முகமாலைக்கும் பளைக்கும் இடையில் கைதவறிவிட்டது. அந்தப் பையினுள் முக்கிய வங்கி ஆவணங்கள் உள்ளமையால் அதனைக் கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து இலங்கைவங்கி முல்லைத்தீவு கிளையில் அல்லது ஈழநாதம் பணிமனையில் ஒப்படைத்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தகவல்:-
க.இலட்சுமணசர்மா
தொ.பே.இல-021-2223431

(6189)

# போரினால் பாதிக்கப்பட்டோருக்கு முல்லையில் 516 வீடுகள் அமைப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் போரினால் பாதிக்கப்பட்ட 516 குடும்பங்களுக்கு உலகவங்கியின் நிதி உதவியில் வடக்குகிழக்கு வீடமைப்புத்திட்டத்தினால் வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றது.

இதில் புதுக்குடியிருப்பு பிரதேசச் செயலர் பிரிவில்100 குடும்பங்களுக்கும், ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் 100 குடும்ங்களுக்கும், துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் 100 குடும்பங்களுக்கும், பாண்டியன் குளம் பிரதேச செயலர் பிரிவில் 115 குடும்பங்களுக்கும், கரைதுறைப் பற்று பிரதேச செயலர் பிரிவில் 101 குடும்பங்களுக்கும் வீடுகள் அமைக் கப்பட்டுவருகிறது.

## கால் நடைகளிற்கான தடுப்பூசி ஏற்றல்

கால்நடைகளுக்கான தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி ஏற்றுவதற்கான ஆயத்த வேலைகள் நடைபெற்று வருவதாக முள்ளிய வளைப்பிரதேச தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன இணைப்பாளர் றொபேட் தெரிவித்தார்.

இதற்கான ஆயத்தங்களை கால்நடை பண்ணையாளர்களை மேற கொள்ளுமாறும், தவறாமல் இந்த தடுப்பூசியினை ஏற்றுமாறும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது.

# பணிநிலை வேண்டுகை

அரசியல்துறை நிறுவனங்களில் கீழ் குறிக்கப்படும் பணிநிலைகளுக்கு தகுதியுடைய ஆண்,பெண் இருபாலரிடமிருந்தும் வேண்டுகைகள் கோரப்படுகின்றது.

**பணிநிலைகள்:-**

01.உதவிக்கணக்காய்வாளர்
02.கணக்காய்வு எழுதுனர்
03.கணக்கு எழுதுனர்

**தகைமைகள்:-**

01. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் வணிகத்துறை அல்லது முகாமைத்துவப் பட்டம். அல்லது அதற்கு சமனான கற்கை நெறிகள்.

02. க.பொ.த-உயர்தரத்தில் வணிகப்பிரிவில் வேண்டிய பாடங்களில் சித்தியடைந்திருத்தல்

03. க.பொ.த சாதாரணதரத்தில் வணிகப்பாடத்தில் சித்தியடைந்திருத்தல்

**அகவை எல்லை:**

விண்ணப்ப முடிவு நாளில் 18 அகவைக்கு உட்படாமல் இருத்தல் வேண்டும்.

**ஊதியம்:**

ஊதிய அளவுத்திட்டத்தின் பிரகாரம் வழங்கப்படும்.

**வேண்டுகைக்கடித உறையில் எழுதப்பட வேண்டிய முகவரி:**

பொறுப்பாளர், ஆளணிப்பகுதி, நிதிப்பிரிவு, அரசியல்துறை,தமிழீழம்.

**விண்ணப்ப முடிவு நாள்:- 20.07.2005**

*வேண்டுகைகள் சேர்ப்பிக்கப்பட வேண்டிய முகவரிகள்:*

| | |
|---|---|
| புதுக்குடியிருப்பு | ~திரைப்பட வெளியீட்டுப்பிரிவுத் தொடர்பகம். |
| மல்லாவி | ~மின்வழங்கல் சேவை நிறுவனம் |
| முழங்காவில் | ~மின்வழங்கல் சேவை நிறுவனம் |
| முள்ளியவளை | ~மின்வழங்கல் சேவை நிறுவனம் |
| கிளிநொச்சி | ~விளம்பரப் பணிமனை, ஈழநாதம், யாழ்சாலை,கிளிநொச்சி. |
| பொதுஅஞ்சல் | ~ஒளிர் காகிதாதிகள் விற்பனையகம், கந்தசாமி கோவிலடி, கிளிநொச்சி. |

ஆளணிப்பகுதி,
நிதிப்பிரிவு,
அரசியல்துறை,
தமிழீழம்.

(சி.12296)

# ஆயுர்வேத வைத்தியசாலையை மீள இயக்கக் கோரிக்கை

நாவற்குழியில் சாவகச்சேரி பிரதேசபையின் உப பணிமனையில் இயங்கி வந்த ஆயுர்வேத வைத்தியசாலையை மீண்டும் இயக்கவைக்க நடவடிக்கையினை எடுக்க வேண்டுமென நாவற்குழி அபிவிருத்திக்குழு கோரிக்கை விடுத்துள்ளது. பல்லாயிரக்கணக்கான மக்கள் மீளக்குடியமர்ந்துள்ள நிலையில் மக்களின் மருத்துவத் தேவைகளை நிறைவு செய்யவும், அலைச்சல்களைத் தவிர்க்கவும் மீண்டும் ஆயுர்வேத வைத்திய சாலை அதே இடத்தில் இயங்க நடவடிக்கையினை எடுக் கும்படி பொது மக்கள் கோரியுள்ளனர். (28)

# உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் தனிஅலுவலகத்தில் இயங்க ஏற்பாடு

மன்னார் மாவட்ட த. பு. கழகத்தின் பங்காளி நிறுவனமான உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவனம் தனக்கென ஓர் தனியான அலுவலகத்தினைத் திறந்து செயறபட ஆரம்பித்துள்ளது. இந்தவகையில் அடம்பன் பிரதேசத்தின் ஆண்டான் குளம் கிராமத்தில் கடந்த 11.07.2005 அன்று நிறுவன இணைப்பாளர் பெ. மேரியசிந்தா அவர்கள் தலைமையில் காலை 10.00 மணிக்கு நிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வில் த.பு.கழகத்தைச் சேர்ந்த அ.கேசவன், மாவட்ட இணைபபாளர் சே.ஜேசுதாசன், மற்றும் பிரிவு இணைப்பாளர்கள், உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவன நிர்வாக உறுப்பினர்கள், மற்றும் பலர் கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் நிறுவனத்தின் சார்பாக விதவைகள், வறியமக்கள், போராளிகள் மாவீரர் குடும்பத்தினர் என சிலர் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கு நிவாரணப் பொருட்கள் மற்றும் வீட்டு உபகரணப் பொருட்கள் சிலவும் வழங்கப்பட்டுள்ளன.

## கால்நடை வைத்திய உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன

யாழ் குடாநாட்டில் உள்ள கால்நடை கூட்டுறவுச்சங்கங்களுக்கு நிக்கொட் மற்றும் நியாப் திட்டத்தின் உதவியுடன் கால்நடை மருத்துவ உபகரணங்கள் வழங்கப்படவுள்ளதாக இதன் அதிகாரி தெரிவித்துள்ளார். கோப்பாய்,சாவகச்சேரி, வேலணை போன்ற பிரதேசங்களில் உள்ள கால்நடை கூட்டுறவுச்சங்கங்களுக்கே இவ் உதவிகள் உடனடியாக வழங்கப்பட இருப்பதாகவும் ஏனைய பிரதேசங்களுக்கும் எதிர் காலங்களில முன்னுரிமை வழங் கப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (28)

## தீயில் எரிந்தவர் நேற்று மரணம்

தீக்காயங்களுடன் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த குப்புசாமி - பத்மநாதன் (வயது 44) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சமையலறையில் ஏற்பட்ட தீ விபத்தில் காயமடைந்ததாகக் கூறி கடந்த எட்டாம் ஆம் திகதி யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக் கப்பட்டிருந்த இவர் சிகிச்சைகள் பயனளிக் காததைத் தொடர்ந்து நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார்.

இவரது சடலம் நேற்றுமாலை உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டது. (33)

# சர்ச்சைக்குரிய வடகொரிய அணுவாயுதத்திட்டம் அமெரிக்காவும், ஜப்பானும் பொது இணக்கப்பாடு

(டோக்கியோ)

**வடகொரியாவின் அணுவாயுதத் திட்டங்கள் பற்றி புதிய சுற்றுப் பேச்சுவார்த்தைகளில் ஸ்திரமான முன்னேற்றத்தின் அவசியம் குறித்து யப்பானும், அமெரிக்காவும் பொது இணக்கத்தை எட்டியுள்ளன.**



டோக்கியோவில் இருதரப்பு வெளிவிவகார அமைச்சர்கள் நடத்திய சந்திப்பின்போது இந்த இணக்கப்பாடு எட்டப்பட்டிருப்பதாக தெரிகின்றது. வடகொரியாவில் சந்தேகத்திற்கிடமான அணுவாயுத திட்டங்களால் எழுந்துள்ள சர்ச்சைகளைத் தீர்க்கும் புதிய சுற்று ஆறுதரப்பு பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் 25 ஆம் திகதி நடைபெறவிருக்கின்றன.

இதற்கான இராஜாங்க முயற்சிகளை சீனாவும் தீவிரப்படுத்தியிருக்கின்றது.

இதேவேளை சீன சனாதிபதியின் தூதுவர் ஒருவர் வடகொரியாவிற்கு சென்றுள்ளார். வடகொரியாவின் அணுவாயுத நெருக்கடிகளை தீர்க்கும் முயற்சிகளில் தென்கொரியா உதவ முன்வந்துள்ளது. தென்கொரியா வடகொரியாவிற்கு ஒருதொகுதி அரிசியை வழங்குவதற்கும் முன்வந்துள்ளது.

இருதரப்புக்களும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் தென்கொரியா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் மேற்குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. தமது அணுவாயுத திட்டங்களால் எழுந்துள்ள சர்ச்சைகளைத் தீர்க்கும் ஆறுதரப்பு பேச்சுவார்த்தைகளில் மீண்டும் இணைந்துகொள்ள வடகொரியா இணக்கம் தெரிவித்திருந்தது. வடகொரியாவிற்கு மனிதாபிமான உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதன் மூலம் இராஜதந்திர ரீதியான தீர்வு முயற்சிகளை துரிதப்படுத்த முடியுமென தென்கொரியா நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

## உலக நாடுகளுடன் நியாயமான உறவை வைத்துக்கொள்ள ஈரான் விரும்புகிறது

### -புதிய சனாதிபதி



உலக நாடுகளோடு நியாயமான உறவுகளை வைத்துக் கொள்ள ஈரான் விரும்புவதாக ஈரானின் புதிய சனாதிபதி தெரிவித்துள்ளார். அத்துடன் ஈரானுக்கெதிராக அறிவிப்புக்கைகளை விடுக்க வேண்டாமென்று மேற்கத்திய நாடுகளை அவர் எச்சரித்துள்ளார்.

இதேவேளை ஈரானின் அரசு தொலைக்காட்சி ஒன்றுக்கு அவர் அளித்த பேட்டியொன்றில் கடுமையாக பேசியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஈரானில் அணுவாயுதத் திட்டத்தை நிறுத்தக் கோரும் அமெரிக்காவின் கோரிக்கைகளுக்கு தலைவணங்கப் போவதில்லையென்ற ஈரான் சனாதிபதியின் உறுதிப்பாட்டை வெளிப்படுத்துவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## இரண்டாம் உலகப்போர் 60ஆம் ஆண்டு லண்டனில் சிறப்பாக அனுஷ்டிப்பு

லண்டனில் கடந்தவாரம் குண்டு வெடிப்பு இடம்பெற்ற போதும் இரண்டாம் உலகப்போரின் 60ஆவது ஆண்டு நிறைவு வைபவம் கடந்த திங்களன்று லண்டனில் சிறப்பாக இடம் பெற்றுள்ளது.

இரண்டாம் எலிசபெத் மகாராணி இதற்கு தலைமை தாங்கியுள்ளார். இந்நிகழ்வின்போது இரண்டாம் உலகப்போரின்போது கடமையாற்றிய படைவீரர்களின் அணிவகுப்புடன் கூடிய இவ் விழாவில் உலகப்போரின்போது பயன்படுத்தப்பட்ட விமானத்திலிருந்து பொப்பி மலர்கள் தூவப்பட்டன. அத்துடன் மகாராணியின் உத்தியோகபூர்வ அரண்மனையில் மதியபோசனமும் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டனர்.

## வீட்டோ அதிகாரத்துடன் கூடிய நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வேண்டுமென நான்கு நாடுகள் கூட்டாக தீர்மானம்

ஐ.நா.பாதுகாப்புச் சபையை விரிவுபடுத்தி வீட்டோ அதிகாரத்துடன் கூடிய நிரந்தர உறுப்பினர் அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்ற தீர்மானத்தை இந்தியா, யப்பான், பிரேசில், ஜேர்மனி ஆகிய நான்கு நாடுகள் தீர்மானம் கொண்டு வந்துள்ளன.

இந்நாடுகளின் சார்பாக பிரேசில் பிரதிநிதி நேற்றுமுன்தினம் இத்தீர்மானத்தை ஐ.நா பொதுச்சபையில் தாக்கல் செய்துள்ளார்.

சர்வதேச அமைதி மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றை மேலும் திறமையாக பராமரிக்க ஐ.நா பொதுச்சபையை விரிவுபடுத்துவதும், பலப்படுத்துவதும் அவசியம் என்று இந்தத் தீர்மானத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த விடயத்தில் 53 உறுப்பினர்களைக் கொண்ட ஆபிரிக்க நாடுகள் சில கருத்து வேறுபாடுகளை கொண்டிருப்பதால் அந்நாடுகளின் பிரதிநிதிகளுடன் இந்த நான்கு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்கள் விரைவில் சந்தித்துப் பேசவிருப்பதால் இந்தத் தீர்மானத்தின் வாக்கெடுப்பு பின்னர் இடம் பெறுமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. 191 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா பொதுச்சபையில் இந்தத் தீர்மானம் வெற்றிபெற வேண்டுமென்றால் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படுகின்றது.

## வளி வெப்பமடைவதை தடுக்காவிடில் 200 ஆண்டுகளில் ஐஸ்லாந்தைக் காணமுடியாது

### -எச்சரிக்கின்றனர் விஞ்ஞானிகள்

பனிப்படலமாக தற்போது காட்சியளிக்கும் ஐஸ்லாந்தீவு அடுத்துவரும் பத்து ஆண்டுகளில் பனிப்பிரதேசமாக இல்லாமல் பாலைவனமாக மாறும் அபாயம் உள்ளதென்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

பூமியின் மேற்பரப்பில் வெப்பம் அதிகரிப்பதால் ஐஸ்லாந்தில் பனிப்படலம் உருகி நகர்ந்து வருகின்றது. ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு பனிப்படலமாக இருந்து பனி உருகி நகர்ந்துவிட்ட பகுதியில் நின்றபடியே ஐஸ்லாந்து விஞ்ஞானி தனது எச்சரிக்கையை விடுத்தார்.

வெப்பம் அதிகரிப்பதால் ஐஸ்லாந்தின் வடக்குப்பகுதியிலுள்ள நகர் ஒன்றில் கடல் மட்டம் உயர்ந்துள்ளதால் அங்குள்ள துறைமுகத்தின் கரையை உயர்த்த வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது.

வெப்பத்தை தக்கவைத்துக்கொள்ளும் வாயுக்கள் வெளியாவதைத் தடுக்க நடவடிக்கை எடுக்காவிடில் 200 ஆண்டுகளில் ஐஸ்லாந்திலுள்ள பனிப்படலம் உருகி பனிக்கட்டியையே பார்க்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டு ஐஸ்லாந்து என்ற பெயரையே மாற்ற வேண்டிவரலாம் என்று விஞ்ஞானிகள் எச்சரிக்கின்றார்கள்.

## பிரதமரின் வாசஸ்தலத்திற்கருகில் மர்மப்பொதி லண்டன் நகரில் மீண்டும் பதற்றம் அதிகரிப்பு

(லண்டன்)

லண்டனில் பிரதமர் ரொனிபிளேயரின் வீட்டுக்கருகில் கண்டெடுக்கப்பட்ட மர்மப் பொதியால் அங்கு மீண்டும் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

முக்கிய வீதிகளிலிருந்து மக்கள் அவசரஅவசரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.கடந்தவாரம் தொடர்குண்டு வெடிப்பினால் இடம்பெற்ற பாதிப்பினால் அங்கு இயல்புநிலை சீராக திரும்பாத நிலையில் நேற்று முன்தினம் பிரதமர் ரொனி பிளேயரின் வீடு, அலுவலகம், பாராளுமன்றக்கட்டடம் ஆகியவை அமைந்துள்ள வீதிக்கு அருகில் கிடந்த பொதியின் காரணமாகவே பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளதோடு, அப்பகுதியில் இருந்தும் மக்கள் அவசரமாக வெளியேற்றப்பட்டுள்ளனர்.

கடந்த வாரம் இடம் பெற்ற தொடர் குண்டு வெடிப்புச்சம்பவங்களிற்கு அல்ஹைதா தீவிரவாதிகளே காரணம் என லண்டன் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இதில் 12 பேர்தாக்குதலில் நேரடியாகத் தொடர்புபட்டவர்கள் என்றும் விசாரணைகளிலிருந்து தெரியவருகின்றது.

இவர்களைப் பிடித்து உரிய தண்டனை வழங்கும் வரை ஓயப்போவதில்லையென்று பிரதமர் ரொனி பிளேயர் கூறியுள்ளார்.

## அரசியல் கட்சிகளுடன் பேச்சு நடத்த மாவோயிஸ்ட்டுக்கள் சம்மதம்

அரசியல் கட்சிகளுடன் பேச்சுநடத்த நேபாளிலுள்ள மாவோயிஸ்ட்டுக்கள் ஒப்புக் கொண்டுள்ளனர்.

இதற்கான சமரசக் குழுவொன்றை நியமிக்குமாறு மாவோயிஸ்ட் தலைவர் சனநாயக ஆதரவு கூட்டணியைக் கேட்டுக் கொண்டுள்ளார். மாவோயிஸ்ட்டுக்களின் நேபாள கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் பிராச்சண்டா, நேபாளக் காங்கிரஸ் தலைவரின் அறிக்கை ஆக்கபூர்வமாகவுள்ளதென்று கூறியுள்ளார்.

சனநாயகத்தை நிலைநிறுத்த கடும் நெருக்குதல் அளிக்குமாறும் பிராச்சண்டா கேட்டுள்ளார். மன்னர் ஆட்சிக்கு எழுந்துள்ள எதிர்ப்புக்களிற்கிடையே இந்த அறிக்கை முக்கியத்துவம் பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை ஐ.நா பொதுச் செயலர் கொபிஅனானின் சிறப்பு ஆலோசகர் தற்போது நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

## சீனாவில் சுரங்க வெடிவிபத்து 66 பேர் பலி; ஏழுபேரைக் காணவில்லை

சீனாவிலுள்ள சிங்ஜியாங் என்ற பின்தங்கிய மாநிலத்தில் ஷன் லொங் சதுக்கத்தில் அமைந்துள்ள நிலக்கரி சுரங்க எரிவாயு நேற்று முன்தினம் வெடித்ததில் 66 பேர் உயிரிழந்ததுடன், ஏழுபேர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சீனாவில் அதிகளவிலான நிலக்கரிச் சுரங்கங்கள் இயங்குகின்றன. அவற்றில் போதியபாதுகாப்பு இல்லாத காரணத்தினால் அடிக்கடி விபத்துக்கள் இடம்பெறுகின்றன.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இவ் விபத்து இவ்வாண்டு முற்பகுதியில் இடம்பெற்ற மோசமான விபத்து எனக் கருதப்படுகின்றது.

### பாராளுமன்ற அமர்வு இரத்து

போட்டஸ்பெயினில் எதிர்பாராத விதமாக பாராளுமன்ற அமர்வுகள் நேற்று இரத்துச்செய்யப்பட்டன. பாராளுமன்றத்துக்கு அருகில் இடம் பெற்ற வெடிவிபத்தையத்து பாராளுமன்ற அமர்வுகள் குறித்த நேரத்திற்கு முன்னர் இடைநிறுத்தப்பட்டன. இதன் போது ஏழு பொது மக்கள் காயமடைந்தனர் எனவும் இவர்களில் சிலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## ரஷ்யாவில் எரிவாயு வெடிவிபத்து 16 பேர் உயிரிழப்பு; கட்டடம் சேதம்

ரஷ்யாவில் இடம் பெற்ற வெடிவிபத்தொன்றில் 16பேர் உயிரிழந்துள்ளனர் ரஷ்யாவில் வடக்கு பகுதியிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றில் இந்த வெடிவிபத்து நிகழ்ந்துள்ளது.

மாடிக்கட்டடத்தில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றிலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாகவும் விபத்துக்கான காரணத்தைக் கண்டு பிடிக்க விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அவசரகால நடவடிக்கைக்கு பொறுப்பான அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எனினும் எரிவாயு சிலிண்டர் ஒன்று வெடித்ததிலேயே இந்த விபத்து நேர்ந்ததாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடம் ரஷ்யாவில் இடம் பெற்ற எரிவாயு வெடிவிபத்தில் 58 பேர் உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்க படையினர் லண்டன் செல்ல விதிக்கப்பட்ட தடை நீக்கம்

பிரிட்டனிலுள்ள அமெரிக்க விமானப்படையின் 12 ஆயிரம் பேரையும் லண்டனுக்குள் செல்ல வேண்டாம் எனத் தடைவிதிக்கப்படடிருந்த தடையை அமெரிக்கா நீக்கியுள்ளது.

கடந்த வாரம் லண்டனில் இடம் பெற்ற தொடர் குண்டு வெடிப்பினால் அமெரிக்க இராணுவத்தலைவர்கள் இந்த உத்தரவை பிறப்பித்ததாக பத்திரிகை அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## தலிபான் தீவிரவாதிகளால் ஆறுபொலிசாரின் தலை துண்டிப்பு

ஆப்கானிஸ்தான் ஹெல்மெண்ட் மாகாணத்தில் தலிபான் போராளிகள் ஆறு பொலிசாரின் தலைகளைத் துண்டித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்களன்று முன் தினம் இடம்பெற்றுள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்னர் தலிபான் போராளிகள் பொலி சாரின் தொடரணி மீது நடத்திய தாக்குதலின் போது நான்கு பொலிசார் பலியானதுடன் மேலும் பலர் காயமடைந்தனர்.

இதன் போது கடத்திச் செல்லப்பட்ட ஆறு பொலிசாரே தலைகள் துண்டிக்கப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் வீதியோரத்தில் வீசிக்கிடக்கக் காணப்பட்டனர்.

இது தொடர்பாக கருத்துரைத்துள்ள ஹெல்மெண்ட் மாகாணத்தின் ஆளுநர், சம்பவத்தில் ஈடுபட்ட தலிபான் போராளிகள் பாகிஸ்தானிய பகுதிகளில் இருந்து வந்தே தாக்குதல்களை நடத்திவிட்டு மீண்டும் பாகிஸ்தான் பகுதிக்கு தப்பிச்சென்றுள்ளதாக தெரிவித்துள்ளார்.

# போரைத் தவிர வேறு வழியில்லை என்பதை எதிரி உப்புவெளி சம்பவத்தின் மூலம் சீராக உணர்த்தி விட்டான்

## -முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை கண்டனம்

(திருகோணமலை)

**திருமலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிறிலங்கா அரசின் திட்டமிட்ட நடவடிக்கை மூலம் உப்புவெளிப் பகுதியில் போராளிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து முல்லை மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவை வன்மையாகக் கண்டித்து கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.**

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

சிறிலங்கா அரசின் அமைதித்தோல் போர்த்தப்பட்ட முகத்திரை உப்புவெளிப் பகுதியில் நடாத்தப்பட்ட போராளிகள் மீதான தாக்குதலால், கிழித்து எறியப்பட்டுள்ளது. கூலிப் படைகள் மூலம் போராளிகளைக் கொன்று வந்த சிங்கள அரசு முகத்திற்கு கறுப்புத் துணி கட்டி வந்து போராளிகளைக் கொன்று விட்டுச் சென்ற சம்பவத்தை இனியும் பொறுக்க முடியாது. போர் நிறுத்தம் என்ற காலங்களில் சிங்கள அரசின் இதுபோன்ற அடாவடிகளால் நாம் எத் தனையோ போராளிகளை இழந்து விட்டோம். எத்தனையோ தமிழ் மக்களை இழந்து விட்டோம். இத்தனை இழப்புக்களாலும் எம் இனத்திற்கு விடிவு கிடைக்குமானால் இவ் இழப்புக்களை தியாக அர்ப்பணிப்பு என்று கூறலாம். ஆனால் சிங்கள அரசு ஈழ விடுதலை முறியடிப்பு என்றே கருதுவதால் எங்கள் போராளிகளை அமைதி விலங்கினால் பூட்ட முடியாது. கையில் ஆயுதமின்றி கழுத்தில் நஞ்சின்றி இருக்கும் போராளிகளைக் கொல்வது வீரமல்ல. இனி அவ்வாறு வீழவும் முடியாது. எங்கள் தேசியத் தலைவர் இனியும் இவ்வாறு போராளிகள் குருதி சிந்த பொறுத்திருப்பார் என்று கூற முடியாது. எந்தச் சந்தேகமும் இல்லாமல் சிறிலங்காவின் சிங்களப் படைகளே இக் கொடூரத்தைச் செய்ததால் சிங்கள அரசின் அமைதிக் காலத்தை என்றும் ஏற்பதற்கில்லை. இந்தக் கோரத்தின் பின் எம்மால் நேசிக்க வேண்டியது போரைத் தவிர வேறு ஒன்றும் இல்லை. போர்தான் எங்கள் அமைதிக்கு வழிசெய்யும். எம் வீரத் தமிழ்க் குலமே உப்புவெளி செல்வநாயகபுரபடு கொலை அமைதிக்கு வந்த சாவுமணி. இனியும் சிங்கள அரசை நம்ப முடியாது. நம்பினால் மேலும் போராளிகளை இழப்போம். ஆதலால் அனைரும் போருக்குத் தயாராகுங்கள். போரைத் தவிர வேறு வழியில்லை என்பதையே எதிரி உப்பு வெளியில் சீராக உணர்த்திவிட்டான். எங்கள் இனத்தின், போராளிகளின் உதிரம் எந்த வேளையிலும் அநியாயமாகச் சிந்தக் கூடாது வீரவரலாற்றுடன் ஈழவிடுதலைக்காகவும அதை அர்ப்பணிப்போம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பரந்தன்-முல்லை வீதி ஓரங்கள் சிதைவு விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

(அலுவலக செய்தியாளர்)

பரந்தன் முல்லைத்தீவு சாலையின் இரு ஓரங்களும் சிதைவடைந்து காணப்படுவதால் அவ்வீதியில் போக்குவரத்துச் செய்வது அச்சம் நிறைந்ததாக உள்ளது என பயணிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீதி தார் இடப்பட்டு செப்பனிடப்பட்டிருந்த ஆரம்பகாலத்தில் வீதியால் சிரமமின்றி பயணிக்க முடிந்தது. தற்போது வீதியின் இரு கரைகளும் சிதை வடைந்து காணப்படுகின்றன. சில பகுதிகளில் பாரஊர்தி அல்லது பயணிகள்பேருந்து ஒன்று மட்டும் பயணிக்ககூடியவகையில் வீதியின் அகலம் உள்ளது. இந்த நிலையில் வீதியூடாக போக்குவரத்துச் செய்கின்ற வாகனங்கள் எதிரெதிராக பயணிக்கும்போது வாகனங்களுக்கு விலகி வழி கொடுக்க முடியாத நிலை காணப்படுகிறது.

விலகி வழிவிடமுயன்றால் விபத்து ஏற்படக் கூடிய அச்சநிலைகாணப்படுகிறது.

எனவே சிதைவடைந்து காணப்படுகின்ற வீதியின் இரு கரைகளையும் செப்பனிட்டு அச்சமற்ற வகையில் பயணிக்கக்கூடிய நிலையை ஏற்படுத்தித் தருமாறு பயணிகள் தெரிவிக்கின்றனர். (லோ)

## திருமலை மாவட்ட செயலக புதிய மாநாட்டு மண்டபம் திறப்பு

(திருமலை)

ஒரு கோடியே 27 இலட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்ட திருகோணமலை மாவட்டச்செயலகத்தின் புதிய மாநாட்டு மண்டபம் கடந்த ஞாயிற்றுக்கிழமை அமைச்சர் அநுராபண்டாரநாயக்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

அரசாங்க அதிபர் காமினி ரொட்ரிகோவின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் திருகோணமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கே.எம்.டி.எஸ். குணவர்த்தன ஆகியோர் பங்கு பற்றினர்.

கிழக்குப் பிராந்திய சிறிலங்கா கடற்படைத்தளபதி றியர்அட்மிரல் வசந்த கரன்கொட, சிரேஷ்ட பொலிஸ் அதிபர் அம்பன் வெல, பிரதேச செயலாளர்கள் மற்றும் பலர் கலந்துகொண்டனர். புதிய மாநாட்டு மண்டபத்தை நிர்மாணிப்பதற்கு பொது நிர்வாகஅமைச்சு 85 இலட்சம் ரூபாவை வழங்கியது. நிகொட் நிறுவனம் 35 இலட்சம் ரூபாவை வழங்கியது. (25)

## சிறிலங்கா படையினரின் சோதனைக் கெடுபிடியால் பழுதான நிலையில் கொழும்பு செல்லும் கடலுணவுகள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவிலிருந்து கடல் உணவுகள் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும் ஓமந்தை சோதனைச் சாவடியில் சிறிலங்காப் படையினரால் சோதனைக் கெடுபிடி மேற்கொள்ளப்பட்டு வேண்டுமென்று தாமதத்தை ஏற்படுத்துவதால் கடல் உணவுகள் பழுதடைந்த நிலையிலேயே கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன என முல்லைத் தீவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் அ.மரியராசா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவில் தற்போது இடம்பெறும் மீன்பிடி தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ஆழிப்பேரலையின் பின்னர் தற்போது 112 வரையான மீன்பிடிப் படகுகள் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளன.

பிடிக்கப்படும் மீன்களில் உள்ளூர் தேவைகள் நிறைவு செய்யப்பட்டு ஒரு தொகுதி மீன்களை கொழும்புக்கு ஏற்றுமதி செய்கின்றோம்.

கொழும்புக்கு ஏற்றுமதி செய்யப்படும் மீன்கள் கடற்கரையில் வைத்தே ஐஸ் இடப்பட்டு கொழும்பிற்கு எடுத்துச் செல்லப்படுகிறது. இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் மீன்கள் ஓமந்தை சோதனைச் சாவடியில் படையினர் நிலத்தில் கொட்டி பரி சோதனை செய்வதாலும் தாமதிப்பதாலும், கொழும்புக்கு எடுத்துச் செல்லும்போது பழுதடைந்து விடு கின்றன.

ஆழிப்பேரலை ஏற்பட்டு பெரும் அழிவுகளுக்கு பின்னர் தற் போது மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். கடற்றொழிலாளர்களின் தொழில் முயற்சிகளைப் பாதிக்கும் வகையில் சிறிலங்காப் படையினரின் இச்செயல் அமைந்துள்ளது.

படையினரின் இச் செயல்களை எமது சமாசம் வன்மையாகக் கண்டிக்கிறது எனவும் தெரிவித்தார்.



கிளிநொச்சி பொதுச் சந்தையில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லை அதிகரித்து வருவதன் காரணமாக வியாபாரிகள் தினமும் பலத்தஅசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர். சந்தைவளாகத்தில் வியாபாரி ஒருவரின் கத்தரிக்காய் மூடையினை கட்டாக்காலி மாடு துவம்சம் செய்வதனை படத்தில் காணலாம். [படம் : சோதி]

## புதுக்குடியிருப்பு-முள்ளியவளை வீதியில் பேருந்து சேவையை அதிகரிக்க கோரிக்கை

(நமது நிருபர்)

புதுக்குடியிருப்பு முள்ளிவளை வீதியில் பயணிகள் பேருந்து சேவை போதுமானதாக இல்லை என மக்கள் முறையிட்டுள்ளனர். பிரசித்தி பெற்ற வற்றாப்பளை ஆலயத்திற்கு செல்வதற்கு ஏனைய வெளிமாவட்ட மக்கள் இவ் வீதியையே அதிகம் பயன்படுத்தி வருகின்றனர்.

நண்பகலுக்கு முன்னர் இவ் வீதியூடாக பயணிகள் பேருந்து மிகக் குறைவாக காணப்படுவதால் தமது பயணங்களை மேற்கொள்வதில் பொதுமக்கள் பெரும் சிரமங்களை அனுபவிப்பதுடன் நீண்ட நேரம் பேருந்துக்காக காத்திருக்கின்றனர்.

எனவே பயணிகளினதும், பக்தர்களினதும் நலனைக் கருத்திற் கொண்டு பேருந்து சேவையைக் அதிகரிக்க வேண்டும் என பொதுமக்கள் கோரியுள்ளனர். (து)



கிளிநொச்சி ஏ-9 நெடுஞ்சாலையில் கடந்த சனிக்கிழமை மாலை ஈருருளியுடன் உந்துருளி மோதியதில் ஈருருளி பலத்த சேதத்திற் குள்ளானது. மேற்படி சம்பவத்தின் போது சேதத் திற்குள்ளான ஈருருளியினைப் படத்தில் காணலாம்.[படம் சோதி]

## பிறப்பு,இறப்பு,விவாகப்பதிவு பிரதிகளை பெறும் முத்திரைக் கட்டணம் உயர்வு!

### -பொதுமக்கள் தரப்பில் பெரும் விசனம்

(கொழும்பு)

பிறப்பு, இறப்பு விவாகப் பதிவு பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவங்களுக்கு இது வரை அறவிடப்பட்ட முத்திரைக் கட்டணத்தில் இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் மாற்றம் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

[illegible]டின் சகல பிரதேச செயலர் [illegible]ம் அனுப்பிவைக்கப்பட்டுள்ள சுற்று நிருபம் மூலம் பதிவாளர் நாயகம் இதனை அறிவித்துள்ளார். இதன்படி பதிவு இலக்கமும், திகதியும் குறிப்பிடப்பட்டிருப்பின் ஒருபிரதிக்கான முத்திரைக் கட்டணம் 25 ரூபாவாகவும், திகதி மட்டும் குறிப்பிடப்பட்டிருப்பின் 50 ரூபா முத்திரைக்கட்டணமும், இரண்டு வருடங்களுக்கான தேடுதல் தேவைப்படுமிடத்து 100 ரூபா முத்திரைக்கட்டணமும் செலுத்தப்பட [illegible]வண்டும்.

எனினும் இதுவரை அறவிடப்பட்ட ஐந்து ரூபா முத்திரைக்கட்டணம் ஒரேயடியாக 25 ரூபாவாக உயர்த்தியமை தொடர்பாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். குறிப்பாக அன்றாடம் உழைத்து உண்ணும் குடிசைத் தொழிலாளர்கள் இதனால் பெரிதும் பாதிக்கப்படுவர் எனத் தெரிவிக்கப்படுவதுடன் அதனை பத்து ரூபாவாகக் குறைக்குமாறும் கேட்டுள்ளனர்.

## மன்னாரில் வீதி விபத்து வயோதிபர் தலத்தில் பலி

(மன்னார்)

மன்னார் -தாழ்வுப்பாடு பகுதியில் இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பேருந்து மோதி வயோதிபர் ஒருவர் சம்பவ இடத்திலேயே பலியாகியுள்ளார். இச் சம்பவம் நேற்று முன்தினம் இடம் பெற்றுள்ளது. மன்னார் பேருந்து நிலையத்திலிருந்து பாடசாலை மாணவர்களை ஏற்றுவதற்காக சென்ற பேருந்து மேற்படி வயோதிபர் சூசையப்பர் சிலுவைக்கு பூ வைத்து வணங்கி விட்டு திரும்பும் போது பின் புறமாக வந்த வயோதிபர் மீது மோதியது.

இதன் போது 72 வயதுடைய சிந்து குருஸ் என்பவர் சம்பவ இடத்தி லேயே பலியாகியுள்ளார்.

## 30 பயிலுநர் பட்டதார்ரிகளுக்கு இம்மாதம் முதல் நியமனம்

(மன்னார்)

நிவாரணம் மற்றும் புனர்வாழ்வு நல்லிணக்க அமைச்சினால் 30 பயிலுநர் பட்டதாரி ஆசிரியர்களுக்கு மன்னார் மாவட்டத்தில் நிரந்தர நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இவர்கள் கடந்த முதலாம் திகதி தொடக்கம் மன்னார், மடு ஆகிய கல்வி வலயங்களிற்கு நியமனம் செய்யப்பட்டுள்ளனர். (ஐ)

## ஆடிஅமாவாசை பிதிர்க்கடன் தீர்க்க

# நகுலேஸ்வரம் ஆலயத்திற்கு செல்வோர் மீது சிறிலங்காப் படையினர் கெடுபிடி நிபந்தனை

(யாழ்ப்பாணம்)

**ஆடி அமாவாசை உற்சவத்துக்கென கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்துக்கு செல்லவுள்ள அடியார்களுக்கு சிறிலங்காப் படையினர் பல்வேறு கெடுபிடி நிபந்தனைகளை விதித்துள்ளனர்.**

அடுத்த மாதம் 4 ஆம் திகதி கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தில் ஆடிஅமாவாசை உற்சவம் நடைபெறவுள்ளது. இந்த உற்சவத்தில் கலந்து கொண்டு பிதிர்க்கடனை யாற்றுவதற்கு வடக்கு கிழக்கு உட்பட பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் இலட்சக் கணக்கான அடியார்கள் வருகை தரவுள்ளனர்.

எனினும் மேற்படி ஆலயமும் அதன் சூழலும் வலிகாமம் வடக்கு இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்துள் இருக்கின்றமையைக் காரணம் காட்டி அங்கு வரவுள்ள அடியார்களுக்கு பல்வேறு நிபந்தனைக் கெடுபிடிகளையும் விதித்துள்ளனர்.

குறிப்பாக இவ் ஆலயத்துக்கு வருகை தரவுள்ள அடியார்கள் கட்டாயம் ஆள் அடையாள அட்டைகளை எடுத்து வர வேண்டும் என்றும் மேற்படி ஆலயச் சூழலில் படையினரால் மட்டுப்படுத்தப்பட்ட பகுதிதவிர்ந்த இடங்களில் நடமாடுவோர் கைது செய்யப்படுவர் என்றும் கீரிமலை தீர்த்தக்கடலில் 100 மீற்றர் தூரத்துக்கு அப்பால் சென்று அடியார்கள் பிதிர்க்கடன்களை செய்ய முடியாது என்றும் படையினர் அறிவித்திருப்பதுடன் ஆலயச் சூழலில் தனியார் எவரும் விழாக்கால வியாபாரத்தில் ஈடுபட முடியாது எனவும் படையினர் அறிவித்திருக்கின்றனர். அத்துடன் ஈருருளிகளில் ஆலயத்துக்கு செல்லவும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (33)

## நல்லூர் ஆலய உற்சவ நடைமுறைக் கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின்போது ஆலயச் சூழலில் கடைப்பிடிக்கப்படவுள்ள உற்சவகால நடைமுறைகள் பற்றிய விசேட கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் இன்று பிற்பகல் மூன்று மணிக்கு யாழ். மாநகரசபை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில் நல்லைக்கந்தன் உற்சவகாலத்தில் கடைப்பிடிக்கப்படவுள்ள ஆலயச் சூழலின் போக்குவரத்து நடைமுறைகள், உற்சவகால வியாபார நடவடிக்கைகள், குடிநீர் விநியோகம் என்பன பற்றி ஆராயப்படும்.

யாழ். நல்லைக்கந்தன் ஆலய வருடாந்த மஹோற்சவம் அடுத்த மாதம் பத்தாம் திகதி ஆரம்பித்து தொடர்ந்து 25 நாட்களுக்கு நடைபெறவுள்ளது. (33)

## மாவிட்டபுரம் ஆலய உற்சவத்திற்கு சென்றோரை வெய்யிலில் நிற்கவைத்து படையினர் சோதனை!

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலய நுழைவாயில் பகுதியில் வைத்து சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட சோதனைக் கெடுபிடிகள் காரணமாக மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய உற்சவத்துக்காகச் சென்றபெருந திரளான அடியார்கள் கொதிக்கும் வெய்யிலில் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியேற்பட்டது.

வலிகாமம் வடக்கு இராணுவ அதிஉயர் பாதுகாப்பு வலயத்துள் இருக்கும் மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலய வருடாந்த உற்சவம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. இந்த உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக பல்வேறு பகுதிகளில் இருந்தும் பெரும் தொகையான அடியார்கள் வருகை தந்திருந்தனர்.

எனினும் அடியார்களின் வருகைக்கு ஏற்ப படையினர் தமது சோதனைக் கெடுபிடிகளை தளர்த்தாது. ஒவ்வொருவராக நீண்ட நேரம் சோதனை செய்ததனால் பெருந்திரளான அடியார்கள் நீண்ட நேரம் கொழுத்தும் வெய்யிலில் கால்கடுக்கக்காத்து நின்றனர். இது குறித்து அடியார்கள் விசனம் தெரிவித்தனர். (33)

## மந்திகை வைத்தியசாலையை தரமுயர்த்த மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சி

(வடமராட்சி)

மந்திகை ஆதார வைத்தியசாலையை பொதுவைத்தியசாலையாக தரமுயர்த்த மக்கள் மத்தியில் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டியும், சிரமதானப் பணிகளை மேற்கொள்ளும் முகமாகவும் நாளை மறுதினம் முதல் வரும்25ஆம் திகதி வரை கொடி தினம் மேற்கொள்ளப்படவுள்ளது.

வடமராட்சி மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையை பொதுவைத்தியசாலையாக தரமுயர்த்த வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்ற நிலையில் பத்திரிகையாளர் மாநாடு ஒன்று நேற்று முன்தினம் காலை 10.00 மணிக்கு வைத்தியசாலை கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையை பொதுவைத்தியசாலையாக மாற்ற வேண்டிய தேவைகள் பற்றி இதில் தெரிவிக்கப்பட்டது. சுகாதார அமைச்சினால் கொண்டுவரப்பட்டுள்ள கட்டமைப்புக்கேற்ப தரம் மூன்றிலுள்ள வைத்தியசாலையை தரம் இரண்டிற்கு மாற்றப்பட வேண்டியுள்ளது.

அவ்வாறு தரம் உயர்த்தினால் மாத்திரமே இவ்வைத்தியசாலையிலுள்ள ஆளணிப் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய முடியும்.

வைத்தியசாலைக்கு ஏற்படும் செலவீனங்களுக்கு திணைக்களத்தால் மட்டுப்படுத்தப்பட்ட நிதியே வழங்கப்படுகின்றது. மேலதிகமாக ஏற்படும் செலவீனங்களை வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபையே மேற்கொள்கிறது என இம்மாநாட்டில் வைத்தியசாலையின் அபிவிருத்திச் சபை செயலர் வி.ஜி. தங்கவேல் தெரிவித்தார். (கா)

## தேரோட்டு வீதி புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். அளவெட்டியிலுள்ள தேரோட்டு வீதி ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் புனரமைக்கப்பட்டு வருகிறது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கிராமிய அபிவிருத்தி நடவடிக்கையின் கீழ் ஒன்பது லட்சத்து 69 ஆயிரம் ரூபா செலவில் இவ்வீதி புனரமைக்கப்படவுள்ளது.

மேற்படி வீதி நீண்ட காலம் புனரமைக்கப் படாதிருந்து வந்தமையால் பொதுமக்கள் போக்குவரத்தின்போது பல இடர்களை சந்தித்து வந்தனர். இந்த நிலைமைகளைக் கவனத்தில் கொண்டே மேற்படி வீதியைப் புனரமைப்புச் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (33)

## யாழ்.இல் நிலத்தடி நீரைப் பேணுவதற்கு ஜேர்மன் தொழில்நுட்ப நடைமுறை

(யாழ்ப்பாணம்)

யாழ். குடநாட்டின் நிலத்தடி நீரைப் பேணுவதற்காக ஜேர்மன் பல்வேறு நீரியல் பாதுகாப்பு தொழில்நுட்பங்களை இங்கு நடைமுறைப்படுத்தவுள்ளது.

இந்தத் தகவலை நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்த ஜேர்மன் தொழில்நுட்பக் கூட்டுத்தாபனத்தின் நீரியல் வளக்குழுத் தலைவர் வோல்ரர் லக்னர் கூறினார்.

யாழ்ப்பாணம் வந்த இவர், யாழ். மாநகர சபை அலுவலகத்தில் வைத்து யாழ். மாநகர சபை ஆணையாளர் கலாநிதி க. குணராஜா, யாழ். பல்கலைக்கழக விவசாய பீடாதிபதி இராஜதுரை, பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளை ஆகியோரைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இதனைக் கூறினார்.

அத்துடன் யாழ்ப்பாண நிலத்தடி நீரைப் பேணும் திட்டத்தின் முதல் கட்ட அம்சமாக கழிவு நீர் நிலத்தடி நீருடன் கலந்து மாசடைவதைத் தடுக்க இங்கு சுரங்கக்கால்வாய் தொழில்நுட்பத்தை ஏற்படுத்தித் தர தாம் திட்டமிட்டிருப்பதாகவும் கூறினார்.

இது மட்டுமன்றி யாழ். அரச அதிபர் மற்றும் யாழ். குடாநாட்டு நீரியல் வளத்துறை அதிகாரிகளையும் இவர் சந்தித்துப்பேசியுள்ளார். (33)

## காணாமற்போனோர் குடும்பங்களின் தேவைப்பாட்டு விபரம் சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோரின் குடும்பங்களுடைய விசேட தேவைப்பாடுகள் பற்றிய விபரங்களைச் சேகரித்து அனுப்புமாறு யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும் யாழ். அரச அதிபர் கே. கணேஷ் அறிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் அமுல்படுத்தப்படும் பல்வேறு புனர்வாழ்வுத் திட்டங்களுள் காணாமற்போனவர்களது குடும்பங்களை உள்ளீர்த்து அவர்களது வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கு உதவும் வகையிலேயே இவ்வாறான விபரங்கள் கோரப்பட்டுள்ளன.

அரசாங்க அதிபரது இக்கோரிக்கைகளுக்கு அமைவாக பிரதேச செயலர் பிரிவுகள் ரீதியாக காணாமற்போனோரின் பெற்றோர், பாதுகாவலர் மற்றும் அவரது குடும்பத்தவர்களுக்கான விசேட தேவைப்பாடுகள் குறித்த விபரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. (33)

## எமது பாரம்பரிய கலை பண்பாட்டினை கட்டிக்காக்க கலை இலக்கிய விழா உதவும்

### வலி மேற்கு பிரதேச செயலர்

(தீவகம்)

எமது தேசம் விடுதலைபெற்று எம் இனத்திற்கு தனி நாடு உருவாகும் காலம் கனிந்து கொண்டிருக்கின்ற வேளையில் தேசிய கலை இலக்கிய விழாக்களை முன்னெடுப்பது எமது பாரம்பரிய கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்களை கட்டிக்காப்பதற்கான சிறந்த ஒரு நடவடிக்கை என வலிகாமம் மேற்குப் பிரதேச செயலாளர் ஏ. மோகனதாஸ் தெரிவித்தார்.

கடந்தசனிக்கிழமை ஊர்காவற்றுறை உதவி அரச அதிபர் பிரிவு கலாச்சார பேரவை நடாத்திய தேசியக் கலை இலக்கிய பெருவிழாவில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில்;

இன்று உலகம் இலத்திரனியலுடன் ஒன்றிணைந்து இருக்கின்ற கால கட்டத்தில் எங்களது இளம் சமுதாயத்தினரை பண்பாட்டு விழுமியங்களோடு ஒன்றிப் போகக் கூடியவாறு வழி நடத்திச் செல்ல வேண்டிய பொறுப்பு சமூகத்தில் உள்ள பெரியவர்களுக்குரியது.

இன்றைய கால கட்டத்தில் எமது கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்களில் அந்நிய கலாச்சாரங்களின் பங்கு நாளாந்தம் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது. இதற்கான முக்கிய காரணமாக தென்னிந்திய சினிமா, தொலைக்காட்சி தொடர்கள் என்பனவே அமைகின்றன. இளம் சமூகத்தினர் இடையே கலை, கலாச்சாரத்தைப் பேணுவதில் பெற்றோர்களுக்கே முக்கிய பங்கு இருக்கிறது. கலாச்சாரம் பேணப்பட வேண்டும். கலை, இலக்கிய பண்பாட்டு விழுமியங்கள் பேணப்பட வேண்டும் என சொல்லிக் கொண்டு இருந்தால் கலாச்சாரச் சீரழிவுகளைத் தடுக்க முடியாது. ஒவ்வொரு பெற்றோர்களும் தங்களது பிள்ளைகளை நல்ல சிந்தனையுடைய சமூக தேசப்பற்றுள்ள பொறுப்புடைய பிள்ளைகளாக வளர்க்க வேண்டும் எனத்தெரிவித்தார். (கீ)

## பாலம் புனரமைப்பு தாமதம்; பயணிகள் பெரும் சிரமம்

(மட்டுவில்)

சங்கானை - சாவகச்சேரி போக்குவரத்து சேவை மிக அண்மையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. இந்தப் பாதையூடாக நீண்ட காலமாக போக்குவரத்துச் சேவைக்காக தனியார் அரச போக்குவரத்து வாகனங்கள் ஈடுபடுத்தப்படவில்லை. தற்போது இந்தப் பாதையூடான போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றபோதும் இந்தப் பாதையில் அமைந்திருக்கின்ற வண்ணத்திப்பாலம் முழுமையாக புனரமைக்கப்படாது இருப்பதினால் தற்காலிகமாக அமைக்கப்பட்ட பாலத்தினூடாக போக்குவரத்துச் செய்ய வேண்டி இருப்பதால் கால தாமதம் ஏற்படுவதுடன் விபத்திற்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன. இதனால் இந்தப் பாதையூடாக பயணம் செய்கின்ற மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

வலிகாமத்தையும் தென்மராட்சியையும் இணைக்கின்ற பாலங்களின் ஒன்றாக இந்தப் பாலம் காணப்படுவதால் இந்தப்பாலத்தின் ஊடாக பெருமளவு வாகனங்கள் நாளாந்தம் போக்குவரத்தில் ஈடுபட்டு வருகின்றன.

கடந்த ஆறு மாத காலமாக இந்தப் பாலம் புனரமைப்பு வேலைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்த வேலை மிகவும் மந்த கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதால் இந்தப் பாதையூடாக போக்குவரத்தில் ஈடுபடுபவர்கள் பெரும் விசனமடைந்துள்ளனர். (கீ)

# தன் முன்னுள்ள நெருக்கடிகளுக்கு சந்திரிகாவின் ஒரே தெரிவு யுத்தமே!

**எத்தகைய** தாக்கத்தின் மூலமும் மட்டு-பொலனறுவை எல்லைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் வாகனத்தொடரணி மீது மேற்கொள்ளப்பட்ட கண்ணி வெடித் தாக்குலுக்கும் திருமலை உப்புவெளியில் விடுதலைப் புலிப் போராளிகளின் தங்குமிடம் மீதும் மேற்கொள்ளப்பட்ட தாக்குதலுக்கும் சிறிலங்கா இராணுவத்திற்கும் தொடர்பில்லை என நிருபித்துவிட முடியாது.

இவ்விரு தாக்குதலிலும் சிறிலங்கா இராணுவம் நேரடியாகத்தலையிட்டுள்ளது என்பதை உணர்த்துவதற்கு இத்தாக்குதல்களின் புறச் சூழல்களே போதுமானதாகும். வெலிக்கந்தயில் புலிகள் பயணம் செய்த பேருந்தின்மீது தாக்குதல் நடத்தப்பட்டமைக்கு சிறிலங்கா இராணுவப் புலனாய்வுத்துறையினின் பங்களிப்பு முக்கியமானதாகும். அதாவது இப்பயணத்தின் இரகசியங்கள் புலனாய்வுத் துறையினாலேயே வழங்கப்பட்டிருத்தல் முடியும்.



திருமலையில் சிறிலங்கா இராணுவத்தரப்பு-அதன் புலனாய்வுத் துறையாகவும் இருக்கலாம்- நேரடியான பங்குபற்றுதலின்றித்தாக்குதல் நடத்தியவர்கள் தாக்குதல் நடத்திய இடத்திற்கு ஆயுததாரிகளாக வாகனத்தில் வந்து-சேர்வதற்கும் தாக்குதல் நடத்திவிட்டுத் தப்பிச்செல்வதற்கும் முடிந்திருக்காது.

இவற்றைப் புரிந்துகொள்ள முடியாதவர்களும் மனதளவில் கூட ஏற்காதவர்களும் யதார்த்தத்தைப் புரிய முடியாத ஜன்மங்களாகவே இருக்க முடியும்.

இது ஒரு புறமிருக்க இவ்விரு தாக்குதல்களும் மேற்கொள்ளப்பட்ட காலப்பகுதி, தேர்ந்தெடுக்கப்பட்ட இலக்குகள் விடுதலைப் புலிகளை யுத்தத்தை நோக்கி விரைந்திழுக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி என மதிப்பிடுவதில் எந்தவித தவறும் இருக்க மாட்டாது. அதாவது விடுதலைப்புலிகளைப் பெரும் சீற்றத்திற்கு உள்ளாக்கும் வகையிலான தாக்குதல்களாக இவை திட்டமிடப்பட்டன.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான அரசாங்கத்திற்குத் தற்பொழுது யுத்தம் என்பது அவசியமான தொன்றாகிவிட்டது. ஏனெனில், சனாதிபதி சந்திரிகாவினால் தீர்த்து வைக்க முடியாத அளவிற்குப் பிரச்சினைகளை அவரும் அவரது அசாங்கத்தினரும் எதிர்நோக்கியுள்ளனர் எனலாம்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும், அவரது அரசாங்கமும் இன்று எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகளாக பின்வருவனவற்றை அடையாளப்படுத்த முடியும்.

1. அடுத்த சனாதிபதித் தேர்தல் எப்பொழுது?

2 சிறுபான்மை அரசாங்கத்தின் ஆயுட்காலம் எவ்வளவு காலம்?

3. பொதுக்கட்டமைப்பின் அமுலாக்கத்தின் நிலை என்ன?

நாட்டில்விலைவாசி ஏற்றம், வேலைவாய்ப்பின்மை, வறுமை தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றாமை உட்பட்ட பொதுவான, வழமையான பிரச்சினைகள் ஒரு புறம் இருக்க, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் அவரது அரசாங்கமும் மேற்கூறப்பட்ட மூன்று விடயங்கள் தொடர்பாக தீர்க்கமான முடிவுகளை மேற்கொள்ள வேண்டிய கட்டாயத்திலுள்ளது என்றே கூறலாம்.

அதிலும், பொதுக்கட்டமைப்பு விவகாரத்தில் விரைந்தும், ஏனையஇரண்டு விடயத்திலும் இவ்வருட இறுதிக்குள் அதிலும் குறிப்பாக நவம்பர் 15 ஆம் திகதிக்கு முன்பாக தீர்க்கமான முடிவிற்கு வந்தாக வேண்டிய கட்டாய நிலை உள்ளது. ஏனெனில் நவம்பர் மாதத்தில் சிறுபான்மையாகவுள்ள அரசாங்கம் வரவுசெலவுத்திட்டத்தைப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

அடுத்ததாக, சனாதிபதித் தேர்தல் 2005 ஆம் ஆண்டா, 2006 ஆம் ஆண்டா என்பது தீர்மானிக்கப்பட்டாக வேண்டும். 2005 ஆம் ஆண்டு எனத் தீர்மானிக்கப்பட்டாலும் சரி, 2006 ஆம் ஆண்டு எனத் தீர்மானிக்கப்பட்டாலும் சரி அரசாங்கம் நெருக்கடியை எதிர்நோக்க வேண்டியதாகவே இருக்கும்.

2006 ஆம் ஆண்டு எனத் தீர்மானிக்கப்படுமானால் எதிர்க்கட்சிகள் ஒரு புறத்தில் விவகாரத்தை உயர் நீதிமன்றம் வரையில் கொண்டு செல்வதோடு, மறுபுறத்தில் மக்களைப் போராட்டத்திலும் இறக்குவதற்கான வாய்ப்புக்களும் உண்டு. இதற்கானதொரு ஒத்திகையாகவே தற்பொழுது ஐ.தே. கட்சி மேற்கொண்ட மக்கள் சக்தி என்றும் பேரணி அமைந்துள்ளது.

அதாவது 2003 இல், ஐ.தேசியக் கட்சி அரசாங்கத்தைக் கவிழ்த்த போது அன்றைய பிரதமரான ரணில் விக்கிரமசிங்க பொறுமை காத்தது போல் இன்று எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்க பொறுமைகாப்பார் என எதிர்பார்ப்பதற்கு இல்லை. அவர் பெரும் மக்கள் போராட்டங்களை நடாத்தி சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அரசாங்கத்தையே ஸ்தம்பிதநிலையடையச் செய்யக் கூடும்.

இது ஒருபுறமிருக்க, சிறுபான்மை அரசாங்கம் நவம்பர் மாதத்தில் தனது வரவு-செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. ஆயினும் கட்சித் தரப்பில் 81 பேரும் எதிர்க்கட்சிவரிசையில் 144 பேருமாக இருக்கையில் வரவு-செலவுத்திட்டத்தைப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றுதல் என்பது சாத்தியப்பாடானதொன்றல்ல. திட்டவட்டமாக வரவு-செலவுத்திட்டம் தோற்கடிக்கப்படுவதற்கான வாய்ப்புக்களோ அதிகம் உண்டு.

இந்நிலையில் அடுத்த கட்டம் என்ன என்பதே சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் முன்னுள்ள கேள்வியாகும். தற்பொழுது ஐ.தே. கட்சியின் தயவிலேயே சிறுபான்மை அரசாங்கம் ஆட்சி நடத்தி வருகின்றது. ஐ.தே. கட்சி அரசாங்கத்திற்கு எதிராகச் செயற்படுவதெனத் தீர்மானம் எடுப்பின் அரசாங்கம் நெருக்கடியைச் சந்திப்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

ஆனால் ஐ.தே. கட்சி இன்றைய நிலையை வரவு-செலவுத் திட்டத்திலும் கடைப்பிடிக்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை.

மேலும், மக்கள் சக்திப்பேரணி வெற்றியளித்ததையடுத்து சனாதிபதித்தேர்தல் முதலில் நடத்தப்பட வேண்டுமென அக்கட்சி விடுத்து வந்த கோரிக்கையை மாற்றம் செய்து பொதுத் தேர்தலை முதலில் எதிர்கொள்ளவும் அது தயாராகும் நிலையில் இருப்பதாகவே அரசியல் நோக்கர்கள் கருதுகின்றனர்.

இந்நிலையில் வரவு-செலவுத் திட்டம் தடைதாண்டி வருவது மிகவும் கடினம் மிக்க தொன்றாகவே இருக்குமென எதிர்வு கூறப்படுகின்றது. அதாவது சிறுபான்மை அரசாங்கத்தின் ஆயுட்காலத்தை வரவு-செலவுத் திட்டம் தீர்மானிப்பதாக இருக்குமென உறுதியாக நம்பப்படுகின்றது.

இதேவேளை, சனாதிபதித் தேர்தலைத் தீர்மானிப்பதில் சனாதிபதி சந்திரிகாவிற்கு பலமாகவுள்ள ஒரே சக்தி பிரதம நீதியரசர் சரத் என். சில்வா ஆகும். அவர் சனாதிபதி சந்திரிகா இரகசியமான முறையில் 2000 ஆம் ஆண்டில் மீண்டும் ஒரு தடவை சத்தியப் பிரமாணம் செய்துள்ளார் எனக் கூறியுள்ளார். இது சனாதிபதி சந்திகாவிற்கு ஆதரவானதொரு நிலையாகும்.

இதற்கும் அப்பால் பிரதம நீதியரசருக்கும்-சனாதிபதி சந்திரிகாவிற்கும் இடையிலான நெருக்கமான உறவு -அதாவது ஒருவரை ஒருவர் பாதுகாக்க வேண்டியதான பரஸ்பர தேவை காரணமாகவும் சனாதிபதித் தேர்தல் விவகாரத்தில் உயர் நீதிமன்ற ஆணை சனாதிபதிக்குச் சிலவேளை சாதகமாகலாம்.

ஆனால் 2006 ஆம் ஆண்டே சனாதிபதித் தேர்தல் என உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்குமானால்- சிறிலங்காவில் அரசியல் வன்முறைகள் பெரியளவில் வெடிப்பதற்கும், அரசு தனது கட்டுப்பாட்டை இழப்பதற்குமான சூழ்நிலை உருவாகிலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதுவும் சனாதிபதி சந்திரிகாவிற்குப் பாதகமானதாகவே இருக்க முடியும்.

இதேவேளை சிறுபான்மை அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தை சிறிது காலத்திற்கு நீடிப்பதற்கு சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரம் சந்திரிகா குமாரதுங்கவிற்கு உதவியாக இருத்தல் கூடும். ஆயினும் அதற்கான கால நீட்சிக்கும் எல்லைகள் உண்டு. ஆகையினால், சிறுபான்மை அரசாங்கம் நெருக்கடிகளைச் சந்திப்பது தவிர்க்க முடியாததாகவே இருக்கும்.

இவை இரண்டிற்கும் முன்பதாக- சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசாங்கம் பொதுக்கட்டமைப்பின் அமுலாக்கம் தொடர்பானதொரு தீர்க்கமானதொரு முடிவிற்கு வருதல் அவசியமானதாகவுள்ளது. இது இலங்கையின் பொருளாதாரத்தை மட்டுமல்ல, அரசியல் சூழலிலும் தாக்கத்தை விளைவிக்கும் ஒன்றாகவே இருக்கும்.

ஆனால், பொதுக்கட்டமைப்பிற்கு எதிரான சக்திகள் சட்டபூர்வமாகவும், வன்முறை மற்றும் தொழிற்சங்க நடவடிக்கைகள் போன்ற எதிர்ப்பு நடவடிக்கைகள் மூலமாகவும் முட்டுக்கட்டை போடவிளைகின்றன. பொதுக்கட்டமைப்பின் செயற்பாட்டிற்கு இடைக்காலத்தடைவிதிக்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு உயர் நீதிமன்றம் மறுப்புத் தெரிவித்துள்ளபோதும், பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்டுள்ளது.

அது மட்டுமன்றிப் பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக தொழிற்சங்கப்போராட்டங்களையும், மாணவர் கிளர்ச்சிகளையும் தூண்டி விடுவதில் ஜே.வி.பி முனைப்புக் காட்டி வருகின்றது. இந்நிலையில் பொதுக்கட்டமைப்பின் அமுலாக்கம் என்பது பல தடைகளைத் தாண்டியே நடைமுறை பெறமுடியும்.

ஆனால் அத்தகைய நெருக்கடிகள் ஒருபுறம் இருக்க, பொதுக்கட்டமைப்பின் அமுலாக்கத்தில் அரசாங்கமும் அக்கறை கொண்டதாக இல்லை. சர்வதேசம் காட்டிய அக்கறை காரணமாக பொதுக்கட்டமைப்பில் அரசு கையொப்பம் இட்டதே ஒழிய பாதிக்கப்பட்ட மக்களின் குறிப்பாக வடக்குக்- கிழக்கு மக்களின் துயர் துடைப்பதில் அரசாங்கம் அக்கறை கொண்டதாக இல்லை. இந்நிலையில், பொதுக்கட்டமைப்பின் அமுலாக்கம் குறித்து அரசாங்கம் தீர்மானம் எதற்கும் வருவதற்கான சூழ்நிலையிலும் இல்லை.

இந்த வகையில் சனாதிபதி சந்திரிகா பல முக்கிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளதோடு- அவற்றிற்குத்தீர்வு காணும் சக்தி அற்றவராகவும் உள்ளார் என்றே கூறலாம். ஆனால், இவையாவற்றையும் திசைதிருப்புவதாகவும், மழுங்கடிப்பதற்காகவும் சனாதிபதிக்கு உள்ள ஒரே வழி யுத்தமே ஆகும்.

இத்தகையதொரு சிந்தனையின்பாற்பட்டே சனாதிபதி சந்திரிகா யுத்தத்தை முனைப்புப் படுத்துவதற்கான- விடுதலைப் புலிகளை யுத்தம் நோக்கி இழுத்து விடுவதற்கான செயற்பாடுகளை மேற்கொள்பவராகவுள்ளனர். யுத்தம் ஒன்று மீண்டும் மூழுமாயின் தனதுபல பிரச்சினைகளுக்கு அது தீர்வாகும் என அவர் கருதுவதாகத் தெரிகின்றது.

அதாவது யுத்தமும் அவசரகாலச் சட்டமும் எதிர்க்கட்சிகள் அரசிற்கு எதிராக மேற்கொள்ளும் சனநாயக ரீதியிலான போராட்டங்களுக்கு முட்டுக்கட்டை போடுவதோடு அரசாங்கம் தனது நடவடிக்கைகளை இடையூறின்றி நிறைவேற்றுவதற்குமான வாய்ப்புக்களை வழங்குகின்றது.இந்தவகையில், சனாதிபதி சந்திரிகாவிற்கு யுத்தம் ஒரு சகலரோக நிவாரணியாக அமையக் கூடியதாகவேயுள்ளது.

இதன் வெளிப்பாடாகவே பலராலும் படையினர் என அடையாளப்படுத்தக் கூடியதுமானதாக்குதலை மேற்கொள்ள அரசாங்கம் தீர்மானித்துள்ளமையாகும். அதாவது புலிகளை யுத்தத்திற்கு வலிந்திழுக்க அரசாங்கம் மேற்கொண்டுவரும் முயற்சியாகும்

இந்த வகையில் சனாதிபதி சந்திரிகா எதிர்கொண்டுள்ள அரசியல் சவால்களைத் தோற்கடிக்க அன்றி மழுங்கடிக்க அவரின் தெரிவாக யுத்தமே உள்ளது. இன்று பொதுக்கட்டமைப்பிற்கு எதிராகவும், சமாதான முயற்சிகளுக்கு எதிராகவும் கூச்சலிடும் சக்திகளையும், தனது அரசியல் எதிர்காலத்திற்கு முட்டுக்கட்டைகளாக உள்ளவற்றையும் போக்குவதற்கு யுத்தமே அவருக்குக் கைகொடுக்கக் கூடியதாகும். ஆகையினால் யுத்தத்திற்கு புலிகளை வலிந்திழுக்க யுத்த நிறுத்த மீறல்களை அரசாங்கம் வெளிப்படையாக மேற்கொள்ள இனிப்பின்னிற்கப் போவதில்லை.

ஜெயராஜ்



கரும்புலிகள் நாள் நிகழ்வில்......



இளநிலை அதிகாரிகள் பயிற்சிநெறி நிகழ்வில்......

# 04-07-2005-10-07-2005




## 04

□ யாழ். குருநகர்ப் பகுதியில் சிறிலங்கா கடற்படையினரின் மின்சார முட்கம்பி வேலியில் சிக்கி கடற்றொழிலாளர் ஒருவர் பலியான சம்பவத்தைக் கண்டித்து குருநகர் இறங்குதுறை சிறிலங்கா படை முகாமிற்கு முன்பாகப் போராட்டமும் முழு கதவடைப்பும் அப்பகுதி மக்களால் மேற்கொள்ளப்பட்டது.



□ இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் அதிகாரிகளையும், சிறிலங்கா அரசாங்கத்தின் சமாதானச் செயலக அதிகாரிகளையும் சந்தித்துப் பேசினர்.

□ பொதுக்கட்டமைப்பிற்கு எதிராகவும், இராணுவ புலனாய்வுத்துறை அதிகாரிகள் கொலை செய்யப்படுவதைக் கண்டித்தும் தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கொழும்பில் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தியது.

□ மேல் நீதிமன்ற நீதிபதி சரத் அம்பேப்பிட்டிய மற்றும் அவரது பாதுகாப்பு அதிகாரியினதும் கொலை வழக்கில் எதிரிகளான ஐந்து பேருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது.

□ திருகோணமலை சீனன்குடா பகுதியில் சிறிலங்கா இராணுவச் சிப்பாய் ஒருவர் இனந்தெரியாதவர்களினால் சுட்டுக்கொலை.

□ ஈ.பி.ஆர்.எல்.எப். முன்னாள் உறுப்பினர் இனந்தெரியாதோரால் சுடப்பட்டு படுகாயமடைந்து பின்னர் உயிரிழந்தார்.

## 05

□ கரும்புலிகள் நாள் நினைவு நிகழ்வுகள் தமிழர் தாயகம் எங்கும் உணர்வெழுச்சியுடன் கடைப்பிடிக்கப்பட்டன.



□ கரும்புலிகள் நினைவு நாளில் தேசியத் தலைவர் அவர்கள் கரும்புலி வீரரின் திருவுருவப் படத்திற்கு ஈகச்சுடரேற்றி அகவணக்கம் செலுத்தினார்.

□ கரும்புலி வீரர்கள் தமது இறுதி விருப்பமாய் விடுதலையையும் தலைவரின் எண்ணங்களையும் தாங்கிச் சென்றதைக் கண்டிருக்கின்றோம். அவர்களது விருப்பமான தேச விடுதலையைப் பெற்று தமிழீழ தேசத்தை சுதந்திர பூமியாக உருவாக்குவதே அந்தக் கரும்புலி வீரர்களின் உயிர்க்கொடைக்கு நாம் செலுத்தும் கடனாக அமையும் என தமிழீழ விடுதலைப்புலிகளின் மூத்த தளபதியும் புலனாய்வுத்துறைப் பொறுப்பாளருமான பொட்டம்மான் அவர்கள் தெரிவிப்பு.

□ தமிழீழ விடுதலைப்புலிகளின் இராணுவ மருத்துவமனையின் ஐந்தாம் ஆண்டு நிறைவு விழா சிறப்புற நடைபெற்றது.

□ விடுதலைப்புலிகளை தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளென இலங்கை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளதாக நோர்வேப்பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் ஒஸ்லோ பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற கருத்தரங்கில் கலந்து கொண்டு தெரிவிப்பு.

## 06

□ கல்முனைப் பகுதியில் இனந்தெரியாதோர் நடத்திய தாக்குதலில் சிறிலங்கா பொலிஸ் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் பலி.

□ பொதுக்கட்டமைப்பு மீது இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பிக்க முடியாது என சிறிலங்காவின் பிரதம நீதியரசர் தெரிவித்தார்.

□ மல்லாவிப் பகுதியில் கார் விபத்துக்குள்ளானதன் காரணமாக மருத்துவபீட மாணவன் பலி.

□ திருகோணமலை மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான விளையாட்டுப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை அத்துமீறி நுழைந்த சிங்களக் காடையர் சிங்கக் கொடியை ஏற்றியதால் பதற்ற நிலை ஏற்பட்டதையடுத்து போட்டிகள் இடை நிறுத்தப்பட்டன.

□ மட்டக்களப்பு வாழைச்சேனையில் கருணா குழுவைச் சேர்ந்த ஒருவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொலை.

## 07

□ இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹக்ரப் ஹொக்லண்ட் திருமலைக்கு விஜயம் செய்து கிழக்குப் பிராந்தியத்துக்குப் பொறுப்பாக புதிதாக நியமிக்கப்பட்ட படை அதிகாரி ரியர் அட்மிரல் வசந்த கரணகொட, இலங்கை இராணுவத்தின் திருகோணமலை மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் சுமித் பாலசூரிய ஆகியோரைச் சந்தித்து திருகோணமலை நிலைவரம் பற்றி பேச்சு நடத்தினார்.

□ விடுதலைப்புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறையினருக்கும், மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினருக்கும் இடையிலான சந்திப்பொன்று தம்பிலுவில விலுள்ள விடுதலைப்புலிகளின் மாவட்ட அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்றது.

□ விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அதிவேக உந்துருளி அணியின் பயிற்சி நிறைவு நிகழ்வு சேனையூர் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்றது.



## 08

□ திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எழிலன் மற்றும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ஹொக்லண்ட் ஆகியோருக்கிடையில் சம்பூரில் நடைபெறவிருந்த சந்திப்பு தவிர்க்க முடியாத காரணங்களினால் ஒத்திவைக்கப்பட்டது.

□ இருநூறு மீற்றர் கடல் பாதுகாப்பு வலயத்தை இரத்துச் செய்யக் கோரியும பொதுக்கட்டமைப்பினை உடனடியாக அமுல்படுத்த வேண்டும் எனக் கோரியும் மட்டக்களப்பு கல்லடியில் மக்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தினர்.

□ லெப். கேணல் நிஷாம் முத்தலிப்பின் கொலை தொடர்பில் விசாரணைக்கென ஊடகவியலாளரான சஞ்சீவ் என்பவர் சிறிலங்கா பொலிசாரினால் கைது.

□ அம்பாறையில் தமிழீழ தேசியத் தொலைக்காட்சி செய்தியாளர் ஒருவரை கடத்திச் சென்று கொலை செய்ய சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் முயன்ற போது மக்கள் ஒன்று திரண்டு அதனை முறியடித்தனர்.

□ பொதுசன ஐக்கிய முன்னணியின் மத்திய மாகாண சபை முன்னாள் விவசாய அமைச்சர் எம். டி. அமீர் உட்பட நான்கு பேர் பொலிஸ் சீருடையில் வந்தவர்களால் கடத்தப்பட்டு பின்னர் கொழும்பில் சடலமாக மீட்பு.



## 09

□ விடுதலைப்புலிகள் போர் பயிற்சிக் கல்லூரியில் இளநிலை அதிகாரிகளின் பயிற்சி நெறி நிறைவு நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்கள் கலந்து கொண்டு பயிற்சி நெறியை நிறைவு செய்த போராளிகளுக்கு சான்றிதழ்களை வழங்கிக் கௌரவித்ததுடன் பயிற்சியின் போது சிறப்பாக செயற்பட்ட போராளிகளுக்கு சிறப்புப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

□ நவாலி சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் 1995ஆம் ஆண்டு இடம்பெற்ற விமானக் குண்டு வீச்சில் பலியான 147 பேரின் பத்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி நிகழ்வுகள் சென்பீற்றர்ஸ் தேவாலயத்தில் அனுஷ்டிப்பு.

□ ஓமந்தைப் புத்தர்சிலை விவகாரம் தொடர்பாக ஓமந்தைப் பிரதேச பொது மக்கள் இலங்கை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் முறையிட்டனர்.

## 10

□ திருகோணமலை உப்புவெளி எனுமிடத்தில் கட்டடம் ஒன்றில் தங்கியிருந்த போராளிகள் மீது சிறிலங்கா இராணுவத்தினர் நடத்திய தாக்குதலில் இரு போராளிகள், உட்பட நால்வர் பலியானதுடன் பொதுமகன் ஒருவர் காயமடைந்தார்.

□ திருகோணமலை உப்புவெளியில் போராளிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதலை [illegible]டுத்து தமிழ்மக்கள் பெரும் சீற்றமடைந்து [illegible] பகுதிக்கு வந்த இராணுவத்தினரைத் [illegible] முயன்றதுடன் அவர்களை விரட்டியடித்தனர்.



□ எமது தேசம் பற்றிய அபிப்பிராயத்தைச் சர்வதேச அளவில் மாற்றமடையச் செய்ய வடக்கு-கிழக்கு மனித உரிமைச் செயலகம் பெரிதும் உதவியது. இவ்வாறு வடக்கு-கிழக்கு மனித உரிமை செயலக ஆண்டு விழாவில் கலந்து கொண்டு அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு.



# அமைச்சர் இரத்னாயக்கவின் போலிஆவண மோசடி அம்பலம்

(கொழும்பு)

சமூக சேவைகள் அமைச்சர் சி.பி இரத்னாயக்க போலி ஆவணங்களைத் தயாரித்து அமெரிக்காவுக்கான விசாவைப் பெறுவதற்கு செய்த மோசடி அம்பலத்திற்கு வந்துள்ளது.

அமைச்சரால் போலி ஆவணங்களுடன் அமெரிக்க தூதரகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட 20 பேரும் அமெரிக்க தூதரின் முறைப்பாட்டினையடுத்து கொள்ளுப்பிட்டி பொலிசாரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டு பின்னர் குறிப்பிட்ட அமைச்சரின் முயற்சியால் நேற்று முன்தினம் விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்கள் ஒவ்வொருவரும் பெருந்தொகையான பணத்தை அமைச்சர் இரத்னாயக்கவிற்கு செலுத்தியிருந்ததாகக் கூறப்படுகிறது. (32)

# சமையல் எரிவாயு பயன்பாட்டில் வீழ்ச்சி

(கொழும்பு)

நாட்டின் பெரும்பாலான கிராமிய மக்கள் சமையல் எரிவாயுவை பயன்படுத்துவதில் இருந்து தம்மை விலக்கிக் கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பொலநறுவையில் இருந்து அநுராதபுரம் வரையிலான பகுதிக் கிராமங்களில மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் மூலம் இந்த விடயம் வெளிக்கொணரப்பட்டுள்ளது. நாளாந்தம் 'வாழ்க்கைச் செலவுப் புள்ளியின் அதிகரிப்பு' அதில் சமையல் எரிவாயுவின் விலையேற்றம் என்பன சமாளிக்க முடியாத நிலையை ஏற்படுத்தியுள்ள மையை அடுத்தே இந்த நிலை உருவாகியுள்ளதாக கிராமிய மக்கள் தெரிவித்துள்ளர். (32)

## நியமனங்களை ரத்துச்செய்யமனு

(கொழும்பு)

சிறிலங்கா நீதிச்சேவையில் நியமிக்கப்பட்டுள்ள 106 பட்டதாரிகளின நியமனங்களை இரத்துச்செய்யக் கோரி மனித உரிமைகள் ஆணைக் குழுவில் மனுச்செய்யப்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கு உட்பட சிறிலங்கா நீதிமன்றங்களில் இவர்களுக்கு அண்மையில் நியமனம் வழங்கப்பட்டிருந்தது. இந் நிலையில் இவர்களின் நியமனங்களை இரத்துச் செய்யக் கோரி நியமனம் கிடைக்காத நான்கு பட்டதாரிகள் மனித உரிமைகள் ஆணைக குழுவில் மனுச் செய்துள்ளனர். (32)

# போராளிகளைத் தாக்குபவர்களைக் கண்டறியாது புலனாய்வுத் துறையினரின் கொலைக்காக கத்துவதில் அர்த்தமில்லை

## -கூட்டமைப்பினர் பாராளுமன்றில் தெரிவிப்பு

தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள், அரசியல்துறைப் பொறுப்பாளர்கள் சுட்டுக்கொல்லப்படுவதற்கும், காயமடைவதற்கும் யார் காரணம்? புலிகளின் அரசியல்துறை அலுவலகங்கள் மீது குண்டுத்தாக்குதல் நடத்துபவர்கள் யார்? இவற்றிக்கு விடைகள் காணப்படாது இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் சுட்டுக் கொல்லப்படுவதாக பாராளுமன்றில் வந்து காட்டுக் கூச்சல் போடுவதில் எந்தப் பயனும் கிடைக்கப் போவதில்லை என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் பாராளுமன்றில் தெரிவித்துள்ளனர்.

கொலைகளை நாம் கண்டிக்கின்றோம், ஆனால் ஒரு தரப்பினரை மாத்திரம் குற்றஞ்சாட்டுவதை விடுத்து இவ்வாறான கொலைகளை நிறுத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் கூட்டமைப்பு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இராணுவப் புலனாய்வுப்பிரிவினர் கொல்லப்படுவதைக் கண்டித்து ஜே.வி.பியின் பாராளுமன்ற உறுப்பினர் லால்காந்த சமர்ப்பித்த ஒத்திவைப்பு பிரேரணை மீது உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

# இராணுவ தளபாட இறக்குமதி தடை குறித்து கருத்துக்கூற விமானப்படைத்தளபதி மறுப்பு

(கொழும்பு)

இராணுவத் தளபாடங்களின் இறக்குமதிக்கு சிறிலங்கா அரசாங்கத்தினால் விதிக்கப்பட்டுள்ள தற்காலிக தடை குறித்து முப்படைத் தளபதிகள் கருத்துக் கூற மறுத்துள்ளனர்.

பொருளாதார நெருக்கடி காரணமாக இராணுவத் தளபாடங்களின் இறக்குமதிகளுக்கு சிறிலங்கா அரசாங்கம் தற்காலிக தடை ஒன்றை நடைமுறைப்படுத்த முடிவு செய்திருந்தது.

எதிர்காலத்தில் இறக்குமதி செய்யப்பட வேண்டிய இராணுவத்தளபாடங்கள் குறித்து நன்கு ஆராய்ந்ததன் பின்னரே இந்தத் தடை உத்தரவை நீக்குவது குறித்து ஆராயப்படுமென சிறிலங்கா அரசாங்கம் அறிவித்திருந்தது.

தனித்தனியாக ஒவ்வொரு ஆயுதப்படைகளினதும் அவசர தேவை, இராணுவத் தளபாடங்களின் தராதரத் தன்மை போன்ற விடயங்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.(32)

# முஸ்லிம்களுக்கு தனித்தரப்பு அந்தஸ்து வழங்கினால் தமிழீழத்திற்காகப் போராடத் தயாராம்

## பிரதி ஊடகத்துறை அமைச்சர் சேகுஇஸ்ஸதீன் தெரிவிப்பு

முஸ்லிம் மக்களை ஒரு தனித்தரப்பாக அவர்களுக்கு சம அந்தஸ்தினை வழங்கினால் விடுதலைப்புலிகளுடன் இணைந்து தழிழீழத்திற்காக போராடப்போவதாக சிறிலங்காவின் பிரதி ஊடகத்துறை அமைச்சர் சேகு இஸ்ஸதீன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பொதுக்கட்டமைப்பு உட்பட பல்வேறு விடயங்களில் நாம் விடுதலைப்புலிகளுடன் பேசி ஓர் சுமுகமான இணக்கப்பாட்டுக்கு வரத் தயாராக இருக்கின்றோம். விடுதலைப் புலிகள் மற்றும் அன்றைய அரசாங்கத்திற்கும் இடையே நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் 'முஸ்லிமகள்' குழு என ஒரு பதம் கொண்டே அழைக்கப்பட்டனர். உண்மையில் முஸ்லிம்கள் ஒரு சமூகம். அன்றைய அரசாங்கத்தில் பங்காளராக இருந்த முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இரு தரப்பினரையும் முஸ்லிம்களை ஒரு சமூகம் என ஏற்றுக் கொள்ளும்படி செய்திருந்தால் முஸ்லிம் சமூகம் பொதுக்கட்டமைப்பில் ஓரம் கட்டப்பட்டிருக்காது.

ஆனால் இன்று முஸ்லிம்காங்கிரஸ் தலைவர் பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக வீதியில் போராடுவதும், ஹர்த்தால் நடவடிக்கையில் ஈடுபடுவதும் மக்களின் சுமுக நிலையினை பாதிப்படையச் செய்வதுடன் மட்டுமல்ல பெரும் வேடிக்கையாகவும் உள்ளது எனவும் தெரிவித்தார்.

## பிறந்தநாள் வாழ்த்து



இல36, சிவநகர் உருத்திரபுரம் என்னும் முகவரியில் வசிக்கும் பாலகுமாரன் மஞ்சுளா தம்பதிகளின் செல்வப் புதல்வன் எழில்வதனன்

தனது முதலாவது பிறந்த நாளை 13.07.2005 இன்று தனது இல்லத்தில் கொண்டாடுகின்றார். இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பம்மா, பெரியம்மாமார், பெரியப்பாமார், மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், மச்சான்மார், மச்சாள்மார், அக்காமார் அண்ணாமார், யாவரும் பல்லாண்டு காலம் நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

## எழில் வதனன்



தகவல்: அப்பா
பாலகுமாரன்

இல.36.
சிவநகர் உருத்திரபுரம்

(சி12352)

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பிதழ்



| | மலர்வு | உதிர்வு |
|---|---|---|
| | 07 | 14 |
| | 08 | 06 |
| | 1937 | 2005 |

### அமரர் திரு. கந்தையா செல்லையா (பிறதர்)

14.06.2005 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டி வீட்டுக் கிரியைகள் 14.07.2005 நாளை (வியாழக்கிழமை) அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளது. தாங்களும் இதில் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

தகவல்,
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,

1 ஆம் பண்ணை,
இல 03 கனகபுரம்,
கிளிநொச்சி.

6349)

## Advertisement for Contractors or Teams of workers for the construction of two buildings in Mallavi Hospital

Actually working on the rehabilitation of Mallavi Hospital, MDM, French Non Governmental Organization, is looking for motivated and qualified workers (like contractors or team of massons, labors, carpenters, electricians and plombers---) to build one men's ward and one emergency ward.

The construction shall begin around the 1st of August.

We need 6 massons, 6 carpenters with their labours, 3 electricians snd 3 plombers.

If you are interested, please come and meet us on Saturday morning 8.30, the 16th of july in our office in Mallavi,

Regards,
MDM Team.

(6401)

# VACANCY

***Position Vacant:***

## *01.Senior Manager in Construction*

To Work in full partnership With the Caritas Internationals program Expatriate Advisor in managing , monitoring and evaluating projects.

***Base station:*** Mulaitivu

***Qualification &Experience:***

The post holder reports directly to the program manager (Expatriate) and the Assistant Director of caritas-Hudec-jaffna. The post holder will undertaken the following activities.

01. Grade I Technical Officer/civil Engineer with 15-20 years experience in the same field.
02. Experience in project Planning, Implementation, Monitoring and Evaluating.
03. Excellent skill in monitoring implementation of program activities.
04. Strong interpersonal and liaison skills.
05. Computer literacy in Win Word, Excel and email software.
06. Age between 40-50 years.
07. Good Knowledge of written and spoken English and able to prepare Monthly progress Report.
08. Good team player.
09. Represent Caritas-Hudec on the issue of shelter activities at district and divisonal level coordination meetings with government, NGO s,UN organizations and the private sector.
10. Regular visits to monitor progress of programme activities and regular reporting back to programme Manager.
11. Post based in Mulaitivu, with regular visits to Kilinochchi and jaffna.

## *02.Secretary.*

To work in full partnership With the Caritas Internationals program Expatriate Advisor in managing, monitoring and evaluating staff personals. The post holder Will undertaken the following activities.

***Base Station:*** Kilinochchi

***Qualification & Experience:***

The post holder reports directly to the Project Coordinator (Expatriate) and the Assistant Director of Caritas-Hudec-Jaffna.

01. Should have Secretariat/administrative background.
02. Assist the management on all programmatic matters such as developing and maintaining a filing system, compilation of beneficiary data basis (livelihood, housing,micro-finance).
03. Translate documents into Tamil or English as required and provide printed copies & letter drafting.
04. Maintain address lists and contact numbers of national and international staff and other essential telephone numbers of organizations, hotels and services useful for the programme.
05. Realize correspondence and reporting for the senior construction Manager and letter drafting of contracts for the finance manager with external organizations,governments, banks, supplier 's beneficiary groups, including the related e-mail.
06. Good command in English (oral & Written)
07. Computer literacy in Ms Office and email software.
08. Ability to work independently.
09. Excellent analytical skills.
10. Good team player.

## *03.Senior manager in Logistics*

To work in full partnership With the Caritas Internationals program Expatriate Advisor in managing, monitoring and evaluating logistic activities.

***Base Station:*** Kilinochchi.

***Qualification & Experience:*** The post holder Report directly to the Director and in his absence to the Program Coordinator (Expatriate or counter part). Reporting is verbally & in written (English). The post holder will undertaken the following activities.

01. Have excellent knowledge in logistic field and at least 3 years esperience in the same field.
02. plan and manage all activities related to procurement transportation and storage of materials & equipment as necessary for the program implementation out side the construction department.
03. Assist the purchasing Office in preparing tenders, documents & receipt of zuotations as necessary.
04. Assist to give the presence of his staff on every logistics sector and give monthly time report to the Director & personal Administrator.
05. Assist at the beginning of the month with the Budget controller to make a provision expenses regarding logistic activities.
06. Have to submit monthly running chart sheets (Pickups, Motor Bikes, Tractors, Trucks) & explanatory about assets materials in Word (including inventory).
07. Supervise all distribution of materials as per program imeplementation out side construction department.
08. post based in Kilinochchi, with regular visits to Mulaitivu and jaffna.

## *04.Livelihood Manager*

To Work in full partnership With the Caritas Internationals (CI) Livelihood program Expatriate Advisor in designing, managing, monitoring and evaluating projects Which assist individuals affected by the tsunami to restor etheir livelihoods.

**Base Station:** kilinochchi

**Qualification & Experience:**

The Post holder Report directly to the overall program manager / Coordinator. the post holder Will undertaken the following activities.

1) Direct, supervise and manage project officers, project managers and animators/ social Workers in identifying projects through a participatory process Which are inclusive of a diverse group of individuals, including vulnerable group.
2) Ensure a high level of program guality in livelihood project design implementati ion, monitoring and evaluating.
3) identify capacity building needs to teamqs projest officers, project managers and animators/ social Workers and local partners.
4) Organize training and Workshops to build and improve capacities of the above mentioned staff.
5) prepare accurate and timely reports to donors.
6) share experiences, methodologies and lessons learned With CI Livelihood partner in other Diocese of sri lanka.
7) Represent Caritas- Hudec on the issue of livelihood and income generating activities at district and divisional level coordination meetings aith government, NGO 's Un organizations and the private sector.
8) Work with project officers to regularly monitor and evaluate livelihood programs (fisheries, agriculture, small enteprises)
9) Experience using word processors, spread sheets and email,
10) Fluency in Tamil and English
11) Good Communication Skills.
12) Demonstrated knowledge in agriculture , fisheries, micro enterprises sector

## *05.TRANSLATOR/ENGLISH TEACHER*

CARITAS - HUDEC is a **Humanitarian Organization.**
Within the frameWork of its 2 Years program for relier after tsunami disaster, CARITAS- HUDEC needs a Translator based in his office of kilinochchi.

**job description**

Integrated to the Tsunami, Team he Will Work Closely With the program Adviser as a Translator and Will organize English classes on the Field.

**Requirements**

* previous Work experience as a translator and/ or as an English teacher
* Knowledge of Technical Engilsh applied to Management and Construction.
* Translate documents into Tamil or English as reguired
* Ability to Work on the field and travel extensively
* Computer skills (Word, excel, internet...)
* Driving License

Please send your application (CV & cover letter in English) by **Friday, july 22, to:**

Caritas Hudec
14 Mathew 's Road
Deogu Street Jaffna

Please specify the post you apply for on your application and make sure to include a telephone contact With your submission.
Caritas- Hudec recruits gualified individuals Without distinction of ethnic background , religion or gender.

**Interested candidates are encouraged to apply by submitting**
**1) Their Curriculum Vitae,**
**2) A letter of motivation, and**
**3) Two non related referees**
**Before 22 july 2005 at Caritas - Hudec, 14 Mathew 's Road, Deogu, street Jaffna.**
**please make sure to include a telepheone contact With Your Submission.**

(சி.12321)

## சேது சமுத்திரத்திட்ட சுற்றுப்புறச் சூழல் ஆய்வுக்கு கண்காணிப்புக் குழு அமைப்பு

(புதுடில்லி)

சேதுசமுத்திரத்திட்ட சுற்றுபுப்புறச் சூழல் ஆய்வுக்கு கண்காணிப்புக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. வன விலங்குத்துறையின் முன்னாள் கூடுதல் தலைமை இயக்குனர் எஸ்.சி.சர்மா ஆகியோர் இக்கண் காணிப்புக் குழுவில் உறுப் பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியக் கடலோர காவல் படை மற்றும் தமிழ்நாடு அரசு ஆகியவற்றின் பிரதிநிதிகளும் இக்குழுவில் இடம்பெறுவர். சேது சமுத்திரக் கழகம் இக்கண் காணிப்புக்குழுவின் அமைப்பா ளராக பணியாற்றும் என அறிவிக் கப்பட்டுள்ளது.

இக்கண்காணிப்புக்குழு தவிர சேது சமுத்திரத்திட்டப் பணிகள் உரியகால வரையறைக்குள் நிறைவேற்றப்படுகிறதா என்பதைத் தொடர்ந்து நேரடியாகக் கண் காணிக்க அமைச்சர் டி. ஆர். பாலு மற்றும்துறைச் செயலர் ஆகியோர் மட்டத்தில் கண்காணிப்பு கட்டமைப்பு உருவாக்கப்பட்டு வரு கிறது.

## பா.ஜ.க வின் இரட்டை வேடத்தை அத்வானி நிரூபித்துவிட்டார் ஜி.கே.வாசன்

(சென்னை)

ராமர்கோவில் பிரச்சினையில் பா.ஜ.க போடும் இரட்டை வேடத்தை அத்வானி நிரூபித்து விட்டார் என்று ஜி.கே.வாசன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஜி.கே. வாசன் வெளி யிட்ட அறிக்கையில் கூறியிருப் பதாவது, பொடா சட்டத்தை இரத்துச்செய்து தீவிரவாதத்துக்கு காங்கிரஸ் கூட்டணி அரசு துணைபோய்விட்டதாக பா.ஜ.க தலைவர் அத்வானி குற்றம் சாட்டியிருக்கிறார்.

பா..ஜ.க ஆட்சியில் பொடா சட்டம் அமுலில் இருந்த போதுதான் பாராளுமன்றமும், குஜராத் மாநிலத்தில் நரேந்திர மோடி ஆட்சியில் அக்ஷர்தாம் கோயிலும் தீவிரவாதிகளால் தாக்குதலுக்கு உள்ளானதை நினைவு கூர கடமைப்பட் டிருக்கி றோம். பாராளுமன்றம் தீவிர வாதிகளால் தாக்கப்பட்டபோது சோனியா காந்தியும், காங்கிரஸ் கட்சியும் பொறுப்புடன் நடந்து கொண்டதைப் போல இன்றைக்கு பா.ஜ.க வினர் நடந்துகொண்டனரா? அதற்கு மாறாக அயோத்தியில் தீவிரவாதிகளின் தாக்குதலைக் கண்டித்து தேசிய அளவில் கடையடைப்பு போராட்டத்தை பாஜ.க நடத்துவது பொறுப்புள்ள எதிர்க்கட்சிக்கு அழகா? எதையும் அரசியல் ஆதாயம்தேடும் நோக்கத்தோடு மன உணர் வுகளைத் தூண்டுவது ஆரோக்கிய மான அரசியலுக்கு வழிவகுக் குமா? சர்ச்சைக்குரிய இடத்தில் இராமர் கோவில் கட்டப்படும் என்று எதிர்க்கட்சித் தலைவராக இருக்கிற அத்வானி கூறுவது நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு குந்தகம் விளைவிக்கின்ற செயலாகும்.

மக்களுக்கு சட்டத்தின் மீது இருக்கும் நம்பிக்கையை சிதைக் கின்ற முயற்சியாகும். மத்தியில் பா.ஜ.க ஆட்சியில் இருக்கும் போது நீதிமன்றத்தீர்ப்பின் மூல மாகவும் , பேச்சுவார்த்தையின் மூலமாகவும் ராமர் கோவில் பிரச்சினைக்குத் தீவு காணப்படும் என்று கூறிய அத்வானி இன்று எதிர்க்கட்சியாக இருக்கும்போது ராமர் கோவில் கட்டப்படும் என்று கூறுவது அக்கட்சியின் இரட்டை வேடத்தை தோலுரித்துக் காட்டுகிறது எனக் கூறினார்.

# சிசு உதான சாதனையாளர் விருது –2004

## 135 வெற்றியாளர்களுக்கு விருது வழங்கிக் கௌரவிப்பு

ACHIEVERS • சாதனையாளர்கள்

சிசு உதான சாதனையாளர்களுக்கான தேசிய விருது 135 வெற்றியாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற இவ் விருது வழங்கும் நிகழ்வில் இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த 15,980 விண்ணப்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட135 வெற்றியாளர்களும் கலந்து கொண்டு தமது விருதுகளைப்பெற்றுக் கொண்டனர்.

ஒவ்வொரு மாவட்டத்தில் இருந்தும் ஐந்து வெற்றியாளர்கள் தெரிவுசெய்யப்பட்டு விருதுகளுக்கு அழைக்கப்பட்டிருந்தனர்.

கிளிநொச்சி மாவட்டத்திலிருந்து அக்கராயன் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த சீவரெத்தினம் தாரணி, கிளிநொச்சி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த மதுரநாயகம் சிந்துஜா, கிளிநொச்சி இந்துக்கல்லூரியைச்சேர்ந்த கே.கோபிநாத், கிளிநொச்சி மகாவித்தியாலயத்தைச்சேர்ந்த விக்டர் டிவனியா நிலூஷினிமான் அக்கராயன் மகாவித்தியாலயத்தைச்சேர்ந்த இராசையா துவாரகா ஆகியோரும்,

முல்லை. மாவட்டத்திலிருந்து உமாகேஸ்வரன் சுரேஷ் -முல்லைத்தீவு கொக்கிளாய் அ.த.க.பாடசாலை, கலைமகள் வித்தியாலயத்தைச்சேர்ந்த கி.விவேகானந்தன், முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தைச்சேர்ந்த தியாகராசா உஷா, முல்லைத்தீவு மத்திய கல்லூரியைச்சேர்ந்த தவராசா வைதேகி, முல்லைத்தீவு மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.ஜெறோம். ஆகியோரும்,

யாழ்.மாவட்டத்திலிருந்து யாழ். இந்துக்கல்லூரியைச்சேர்ந்த குமாரவடிவேல் குருபரன், விக்டோரியாக் கல்லூரியைச்சேர்ந்த சந்திரபாலன் சுகன்யா, யாழ் பற்றிக்ஸ் கல்லூரியை சேர்ந்த ஜேசுதாசன் நியுமன், யாழ் இந்துக்கல்லூரியைச் சேர்ந்த கே.தர்சன் யாழ்.யூனியன் கல்லூரியைச் சேர்ந்த விவகானந்தன் ஜீவிகா ஆகியோரும் தெரிவுசெய்யப்பட்டு விருது வழங்கிக்கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த கண்ணியத்துக்குரிய முன்னணி பிரஜைகளைக் கொண்ட சுதந்திரமான நடுவர்குழுவொன்றினால் நீங்கள் ஒரு வெற்றியாளர்களாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளீர்கள் என்ற விடயத்தை இங்கு மீண்டும் வலியுறுத்திக் கூற விரும்புகிறோம். இந்த விருதுகளுக்கெனக் கிடைத்த விண்ணப்பங்களில் பெரும்பாலானவை நாட்டின் பல்வேறு பாகங்களையும் சேர்ந்த உயர் ஆற்றல்களைக் கொண்டிருந்த பிள்ளைகள் மற்றும் இளைஞர் யுவதிகளிடம் இருந்தே கிடைத்திருந்தன.

அவர்கள் பல்வேறு துறைகளிலும் தலைசிறந்த சதனைகளை நிகழ்த்தியிருந்தார்கள் அந்த வகையில் ஒரு வெற்றியாளராக நீங்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதானது உண்மையிலேயே ஒரு தலைசிறந்த விதிவிலக்கான சாதனையாகவுள்ளது.

எனவே அதன் காரணமாக நீங்கள் எமது நாட்டின் தலைசிறந்த பிள்ளைகளில் சிறந்தவர்களில் மிகச்சிறந்தவராக இருந்து வருபவராக கருதப்படுகின்றீர்கள் என இதுதொடர்பான செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யாழ். பல்கலைக்கழக அணிக்கு வெற்றி

கொக்குவில் மத்திய சனசமூக நிலைய விளையாட்டுக்கழகம் 30 பந்து பரிமாற்றங்களுக்கு மட்டுப்படுத்திய கே. சி. சி. சி சுற்றுக் கிண்ணத்திற்கான ஒரு ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணி வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணியும் அரியாலை ஸ்ரான்லி அணியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணி 156 ஓட்டங்களைப்பெற்று அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்தது.

காந்தன் 58, ரஜனி 28, கரிதாஸ் பத்து ஆகக்கூடிய ஓட்டங்களைத் தமது அணிக்காகப் பெற்றனர்.

பல்கலைக்கழக அணி சார்பில் பந்து வீசிய ஜெயந்தன், ரவி ஆகியோர் முறையே 4, 2 இலக்குகளையும் செந்தூரன், நிஷாந்தன் ஆகியோர் தலா ஒரு இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பல்கலைகழக அணி மூன்று இலக்குகளை இழந்து 159 ஓட்டங்களைப் பெற்று வெற்றி பெற்றனர்.

சர்வா 54, தனுஷ்காந் 36, மணிவண்ணன் 20 ஆகியோர் தமது அணிக்கான ஆகக்கூடிய ஓட்டங்களாகப் பெற்றுக் கொண்டனர்.

பந்துவீச்சில் ரஜனிகாந் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார். (41)

## மாகாணமட்ட உடற்பயிற்சி போட்டி வட்டக்கச்சி பாடசாலை அணிகள் வெற்றி

வவுனியா நகர சபை மைதானத்தில் நடைபெற்ற வடக்கு, கிழக்கு மாகாணமட்டப் போட்டியில் வட்டக்கச்சி பிரதேச பாடசாலை அணிகள் வெற்றிபெற்றுள்ளன. உடற்பயிற்சிப் போட்டியில் கிளி. இராமநாதபுரம் மேற்கு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை இரண்டாம் இடத்தையும், சதுரங்கப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் வட்டக்கச்சி மகாவித்தியாலய பெண்கள் அணி முதலாம் இடத்தையும், ஆண்கள் அணி மூன்றாம் இடத்தையும் பெற்று தேசிய மட்டப்போட்டிக்கு தெரிவாகியுள்ளன. அடுத்து இராமநாதபுரம் மேற்கு பாடசாலையில் வலைப்பந்தாட்டப்போட்டி 15,17, ஆகிய ஆண்கள் அணிகள் அடுத்தவாரம் மாகாணமட்டப்போட்டிக்குச் செல்வதற்கு பயிற்சியில் ஈடுபடுவதும் குறிப்பிடத்தக்கது. (12)





சதுரங்கப்போட்டியில் முதலாம் இடத்தைப்பெற்ற வட்டக்கச்சி மாகாவித்தியாலய பதினைந்து வயதுப் பெண்கள் அணியினரும், மூன்றாம் இடத்தைப்பெற்ற ஆண்கள் அணியினரும். (படம் - ரூபன்)

## சிறப்பான துடுப்பாட்ட பெறுபேறை பெற்றுள்ளேன் என்கிறார் கங்குலி

இந்திய கிரிக்கெட் அணித்தலைவர் கங்குலி தான் மீண்டும் போமுக்கு திரும்பியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து கவுண்டி அணியான கிளமோகன் அணிக்காக விளையாடிய கங்குலி நேற்று இந்தியா வந்தார். அவர் அங்கு தெரிவிக்கையில்;

மேற்படி அணிக்காக நான்கு போட்டிகளில் 379 ஓட்டங்களை குவித்துள்ளதாகவும், இதன் மூலம் தான் நல்ல போமுக்கு திரும்பியுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 30ஆம் திகதி இந்தியா, மேற்கிந்தியத்தீவு, சிறிலங்கா அணிகள் கலந்து கொள்ளும் முக்கோண போட்டி சிறிலங்காவில் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சர்வதேச ஒருநாள் போட்டி மத்தியஸ்தர் பணியிலிருந்தும் ஷெப்பேட் ஓய்வுபெற்றார்



கிரிக்கெட் உலகில் அனைவராலும் மதிக்கப்பட்ட மத்தியஸ்தர் டேவிட் ஷெப்பேட் நேற்று நிறைவுபெற்ற இங்கிலாந்து அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான நட்வெஸ்ட் கிண்ண இறுதிப் போட்டியுடன் சர்வதேச போட்டிகளில் மத்தியஸ்தம் வகிக்கும் பணியிலிருந்து ஓய்வு பெற்றார்.

64 வயதுடைய அவர் இதுவரை 92 டெஸ்ட்கிரிக்கெட் போட்டிகளுக்கு மத்தியஸ்தராகக் கடமையாற்றியுள்ளார்.

1985 ஆம் ஆண்டு முதலாவது டெஸ்ட் போட்டியிலும் கடந்த மாதம் ஜமேக்காவில் நடைபெற்ற பாகிஸ்தான் மேற்கிந்தியத் தீவுகளுக்கிடையிலான டெஸ்ட் போட்டியிலும் இறுதியாக கடமையாற்றினார்.

நேற்றைய போட்டியுடன் 174 ஒருநாள் போட்டிகளுக்கு மத்தியஸ்தராக கடமையாற்றியவராக கணிக்கப்படுகின்றார்.

பிராந்திய அணி ஒன்றுக்கு விளையாடியதன் மூலம் ஷேப்பேட் கிரிக்கெட் உலகிற்கு அறிமுகமானார் 1996,1999,2003 ஆகிய உலகக்கிண்ண இறுதிப் போட்டிகளுக்கும் மத்தியஸ்தராக கடமையாற்றியுள்ளார்.

நடனமாடும் மத்தியஸ்தர் எனக் கிரிக்கெட் ரசிகர்களிடம் பிரபல்யம் பெற்ற இவர் விளையாடும் அணி 111 ஓட்டங்கள் பெற்றதும் நடனமாடுவது குறிப்பிடத்தக்கது.




## சிறிலங்கா – மேற்கிந்தியத்தீவு அணிகள் பங்கேற்கும் முதலாவது டெஸ்ட் போட்டி எஸ்.எஸ்.சி யில் இன்று



சிறிலங்கா - மேற்கிந்தியத்தீவுகள் அணிகள் கலந்துகொள்ளும் இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் தொடரின் முதலாவது போட்டி இன்று கொழும்பு எஸ். எஸ். சி. மைதானத்தில் ஆரம்பமாகின்றது,

இதற்காக இரு அணிவீரர்களும் நேற்று தீவிர பயிற்சியில் ஈடுபட்டனர்.

சிறிலங்கா அணியைப் பொறுத்து வீரர்கள் போமுக்கு திரும்பியுள்ளமை மற்றும் நீண்ட இடைவெளியின் பின் முரளிதரன் அணிக்கு திரும்பியுள்ளமை போன்றன அவ்வணியைப்பலமடையச் செய்துள்ளது.

மேற்கிந்தியத்தீவு அணி முன்னணி வீரர்களையே பல தோல்விகளைச்சந்தித்துள்ள நிலையில் தற்போது சிறிலங்கா வந்துள்ள அணி லாரா உட்பட பல முன்னணி வீரர்களை இழந்த நிலையில் பலவீனமான நிலையில் இப்போட்டியில் கலந்து கொள்ளவுள்ளது.



குறிப்பாக அனுபவ வீரராக அணித்தலைவர் சந்தர்போல் மாத்திரமே இடம்பெற்றுள்ளார். இதனால் இப்போட்டித் தொடர் சிறிலங்கா அணிக்கே சாதகமாக அமையுமென எதிர்வு கூறப்படுகின்றது.

அத்துடன் சிறிலங்கா அணி பங்கேற்கும் 150ஆவது டெஸ்ட் போட்டி என்பது குறிப்பிடத்தக்கது.

## சச்சின்டெண்டுல்கர் மிக விரைவில் சர்வதேச போட்டிக்குத் திரும்புவார்



இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் மிக வேகமாக சர்வதேச போட்டிக்கு திரும்புவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

அவருடைய முழங்கையில் ஏற்பட்டுள்ள காயம் விரைவாக குணமடைந்து வருவதாகவும் இந்திய கிரிக்கெட் அணியின் வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார்.

ஆனாலும் அவர் பயிற்சிகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவரது உடல் விளையாட்டுதகுதிக்கு ஏற்ற வகையில் இல்லை எனவும், பயிற்சியின் மூலமே அதனை மீளக்கட்டியெழுப்பி மீண்டும் போட்டியில் கலந்து கொள்ள முடியும் எனவும்தெரிவித்துள்ளார்.

16 ஆண்டுகளாக தொடர்ந்து கிரிக்கெட் ஆடி வருகிறேன். தற்போது ஏற்ற இறக்கங்கள் இருக்கத்தான் செய்யும். இதையெல்லாம் சமாளித்துக்கொண்டு போக வேண்டும். இதெல்லாம் கடினமான பெரிய பிரச்சினையில்லை என டெண்டுல்கர் தெரிவித்துள்ளார்.

## பங்களாதேசுக்கான சுற்றுலாவை இந்திய அணி பிற்போட்டது

இந்திய கிரிக்கெட் அணி பங்களாதேசுக்கான சுற்றுலாவைப் பிற்போட்டுள்ளது.

உலக அணியில் பலவீரர்கள் இடம் பிடித்திருப்பதும் அதனைத் தொடர்ந்து சில போட்டிகளில் விளையாடவேண்டியிருப்பதன் காரணமாகவும் பிற்போடவேண்டி ஏற்பட்டதாக இந்திய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

இம்முடிவுக்கு பங்களாதேஷ் கிரிக்கெட் சபையும் சம்மதம் தெரிவித்துள்ளது. பங்களாதேசுக்கான சுற்றுலாவை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் இந்திய அணி மேற்கொள்ளவிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உலகக்கிண்ண போட்டியில் பங்கேற்கும் அணிகள் தெரிவு

2006 ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண கிரிக்கெட்போட்டியில் டெஸ்ட்அந்தஸ்துப் பெற்ற 11 அணிகளுடன் மோதவுள்ள அடுத்த ஐந்து அணிகள் எது என்பது ஊர்ஜிதமாகியுள்ளது. அந்தவகையில் பேர்முடா, கனடா, அயர்லாந்து, ஸ்கொட்லாந்து, ஹொலண்ட் ஆகிய அணிகள் இடம்பிடித்துள்ளன. ஐந்தாவது இடத்துக்கான போட்டியில் ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நேற்று நடைபெற்ற போட்டியில் 145ஓட்டங்களால் தோற்கடித்த ஹொலண்ட் உலகக்கிண்ண வாய்ப்பைப் பெற்றதுடன் அடுத்த நான்கு வருடங்களுக்கு ஒரு நாள் போட்டியில் கலந்து கொள்ளும் அந்தஸ்தையும் பெற்றது. அத்துடன் ஐந்து இலட்சம் அமெரிக்க டொலரையும் பரிசாகப் பெற்றது.

## சிந்தனைக்கு



ஒரு உயிர் உன்னதமானது
என்பதை நானறிவேன்; ஆனால்
உயிரிலும் உன்னதமானது
எமது உரிமை, எமது சுதந்திரம்,
எமது கௌரவம்.

தமிழீழ தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ்.சாலை,கிளிநொச்சி. 13-07-2005

தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948

மின் அஞ்சல்
natham23 ela@ yahoo.com


## இவருக்கா இப்பரிசு?

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பெயரினை சமாதானத்திற்கான நோபல் பரிசிற்குப் பரிசீலனை செய்ய ஒஸ்லோ பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர்கள் இருவர் சிபார்சு செய்துள்ளமை – நோபல் பரிசிற்கு இப்படிப்பட்டவர்களின் பெயர்களா? சிபார்சு செய்யப்படுகின்றன. என்ற ஆச்சரியத்தையே தோற்றுவிப்பதாய் உள்ளது.

“தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தைப் போர் என்ற நிலையில் இருந்து விலகிச் செல்ல வைத்துள்ளமை” என்பது அவர்கள் சனாதிபதி சந்திரிகாவை சிபார்சு செய்வதற்கான முக்கிய காரணியாகப் பரிந்துரைக்கப்பட்டுள்ளது. ஆனால், இது எந்தளவிற்கு உண்மைத் தன்மை பொருந்தியது? யதார்த்தத்தின் பாற்பட்டது?

சனாதிபதி சந்திரிகா விடுதலைப்புலிகளை போர் என்ற நிலையில் இருந்து விலகிச் செல்ல எத்தகைய பங்களிப்பை ஆற்றினார்? இன்று நடைமுறையிலுள்ள யுத்தநிறுத்த உடன்பாடுகூட சனாதிபதி சந்திரிகாவினால் மேற்கொள்ளப்பட்டதா? அன்றி ஆதரவைப் பெற்றதா? இவ் உடன்பாடு கைச்சாத்தானபோது சனாதிபதி சந்திரிகா இதனை எதிர்க்கவில்லையா?

சமாதானப் பேச்சுவார்த்தைகள் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படும் என 1994இல் பதவிக்கு வந்த சனாதிபதியால் ஆறு மாதங்கள் கூட சமாதானத்தைக் கட்டிக்காக்க முடியவில்லை என்பதே உண்மையாகும். ஆட்சி அதிகாரத்தில் நிலை பெற்றதும் – அதாவது, சனாதிபதியாகப் பதவி ஏற்றதும் – யுத்தத்தையே அவர் நாடினார்.

இதன் விளைவு ‘சமாதானத்திற்கான யுத்தம’ என்ற பெயரில் அவர் நடத்திய சுமார் ஏழு ஆண்டுகால யுத்தமானது பல்லாயிரம் தமிழர்கள் இறக்கவும், இலட்சக்கணக்கான மக்கள் இடம்பெயரவும் காரணமான கொடிய யுத்தத்தைத் தமிழ் மக்கள் மீது திணிப்பதாக இருந்தது.

விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாக அறிவிப்புக்களை வெளியிட்டு வந்தபோதும், இது பலவீனத்தின் வெளிப்பாடு, இயலாமையின் வெளிப்பாடு எனக்கூறி விடுதலைப்புலிகளைத் தோற்கடிக்கும் வரை யுத்தம் தொடரும் என இலங்கையையே அழிவுப்பாதையில் இட்டுச் சென்றவர் சனாதிபதி சந்திரிகாவாகும்.

இவர் தமிழ் மக்களின் அழிவிற்கு மட்டுமல்ல, சிங்கள மக்களின் அழிவிற்கும் காரணமாக இருந்தவர். பல ஆயிரக்கணக்கான இராணுவத்தினர் பலியாகவும், பல்லாயிரக்கணக்கானோர் அங்கவீனமடையவும் இவர் பிடிவாதத்துடனும் நடத்திய யுத்தமே காரணமாக இருந்தது.

சிறிலங்கா இராணுவம் மீளமுடியாத தோல்விகளையும், இயங்க முடியாத நிலையை அடைந்தபோதும்கூடச் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்க அவர் தயாராக இருக்கவில்லை. சிறிலங்கா இராணுவமே செயலிழந்து போயிருந்தது.

மாறாக, விடுதலைப்புலிகள், சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்காக என்றும் கதவுகளைத் திறந்தே வைத்திருந்தார்கள். சனாதிபதி சந்திரிகா நடத்திய கொடிய ஏழு ஆண்டுப் போரின் இறுதியில் முதலில் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தவர்களும் புலிகளே. புலிகள் ஒருதலைப்பட்சமான யுத்த நிறுத்தத்தை அறிவித்திருந்தவேளையில்கூட, புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்ததோடு, யுத்தநிறுத்தம் முடிவுற்ற சில மணி நேரத்திற்குள்ளேயே பாரிய படையெடுப்பை நடத்தியவர் சனாதிபதி சந்திரிகா ஆவார்.

இது ஒருபுறம் இருக்க, சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பொ.ஐ.முன்னணி அரசாங்கம் வீழ்ச்சி கண்ட பின்னரே யுத்த நிறுத்த உடன்பாடு ஒன்று கைச்சாத்தாகிஃது. பின்னர் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்தமை காரணமாகவே சனாதிபதி சந்திரிகாவினால் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே. முன்னணி அரசாங்கம் கவிழ்க்கப்பட்டது.

அதன் பின்னர் யுத்த நிறுத்தம் தொடர்ந்து பேணப்பட்டதாயினும் – அது விடுதலைப்புலிகள் காத்த மிதமிஞ்சிய பொறுமை காரணமாகவும் சர்வதேச சமூகம் யுத்த நிறுத்தம் பேணப்படுதல் வேண்டும் எனக் கொடுத்துவந்த அழுத்தத்தின் காரணமாகவுமே ஆகும்.

இத்தகையதொரு நிலையில், சனாதிபதி சந்திரிகாவிற்குச் சமாதானத்திற்கான நோபல் பரிசு வழங்கப்பட வேண்டும் எனச் சிபார்சு செய்தவர்கள் சந்திரிகாவின் சுயரூபத்தை அறியாமல் செய்தார்களா? அவ்வாறு இல்லாதுவிடில் சனாதிபதி சந்திரிகாவிடம் ஏதாவது நலனைப் பெற்றுக்கொண்டார்களா? அதுவும் இல்லாவிடில் இது தமது நாட்டிற்குப் பெருமை சேர்க்கும் எனக் கருதினார்களா? இதில் காரணம் எதுவாக இருப்பினும் நோபல் பரிசிற்கு சந்திரிகாவின் பெயர் பரிசீலிக்கப்படுமானால், இப்படிப்பட்டவர்கள் தான் நோபல் பரிசிற்குச் சிபார்சு செய்யப்படுகின்றார்களா? அன்றிப் பரிசீலிக்கப்படுகின்றார்களா? என்ற தப்பான அபிப்பிராயம் நோபல் பரிசு மீது மக்களுக்கு ஏற்பட்டுவிடும்.

# சுனாமி நிவாரண வழங்கலில் பாரிய மோசடி; உலக வங்கி அரசிடம் விளக்கம் கோரல்!

(கொழும்பு)

ஆழிப்பேரலையால் பாதிக்கப்படாத குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்கப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து உலக வங்கி அரசாங்கத்திடம் விளக்கம் கேட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிதியமைச்சின் எழுத்துமூல உத்தரவு மற்றும் வழிகாட்டல்களைப் பொருட்படுத்தாது சுமார் பத்துக்கோடி ரூபா நிவாரண உதவி நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவிலுள்ள ஆழிப்பேரலையினால் பாதிக்கப்படாத குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படும் சம்பவம் குறித்து உலகவங்கி அரசாங்கத்திடம் விசாரணை செய்துள்ளது.

இந்நிலைமையில் நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் ஆழிப்பேரலை நிவாரணப் பகிர்வு குறித்து அரச கணக்காய்வாளர் ஆய்வுகளை மேற்கொள்ள ஆரம்பித்திருப்பதாக அரச கணக்காய்வுத் திணைக்களத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் ஐந்தாயிரம் ரூபா கொடுப்பனவே நிதியமைச்சின் வழிகாட்டல்களுக்கு மாறாக கம்பகா மாவட்டத்தில் வழங்கப்பட்டுள்ளதாகத தகவல்கள் வெளியாகியுள்ளன.

அரசாங்கத்தின் சரியான ஆவணங்களின்படி நீர்கொழும்பு பிரதேச செயலாளர் பிரிவில் ஆழிப்பேரலை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை 599 ஆக இருக்கையில் 15843 குடும்பங்களுக்கு நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

கணக்காய்வாளர் மேற்கொண்டிருக்கும் ஆரம்பகட்ட ஆய்வுகளின்படி ஆழிப்பேரலை நிவாரணம் பெறப்பட்டவர்களில் ஆழிப்பேரலையினால் எதுவித பாதிப்பும் அடையாத சில்லறை வியாபாரிகள், முச்சக்கர வண்டி உரிமையாளர்கள் மற்றும் வெளிநாடு சென்றவர்கள் ஆகியோர் அடங்குவதாகத் தெரியவந்துள்ளது.

அதேபோல இந்த நிவாரண உதவியை வழங்குமாறு பிரதேச செயலாளர்கள் வங்கிக்கு பரிந்துரை செய்து அனுப்பிய பட்டியலில் ஒரே நபர்களின் பெயர்கள் இரண்டு மூன்று இடங்களில் இருப்பதும் கணக்காய்வாளரினால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (32)

# ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இன்று ஒற்றைச் சிறகுடன் பறக்கின்றது

### களுத்துறையில் எதிர்க்கட்சித் தலைவர்

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தற்போது ஒற்றைச் சிறகுடன் பறக்கும் அரசாங்கமாக விளங்குகிறது. அந்த ஒற்றைச் சிறகையும் இருகால்களையும் உடைத்துக் கொள்ளாது இருக்குமாறு தான் அரசாங்கத்திற்குக் கூறுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

களுத்துறையில் நடைபெற்ற கூட்டத்தில் உரையாற்றியபோதே எதிர்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இதனைத் தெரிவித்தார்.

இந்த ஆண்டிற்குள் சனாதிபதித் தேர்தலொன்றைப் பெறுவதற்கு மக்களுக்கு சட்டரீதியாக இருக்கும் அதிகாரத்தைக் கொள்ளையிட அரசாங்கம் முயலுமானால் அதன் ஒற்றையிறகும் உடைக்கப்படுமென எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்துள்ளார்.

சனாதிபதித்தேர்தல் சம்பந்தமாக தீர்மானம் எடுக்க வேண்டிய தேர்தல் ஆணையாளருக்கு அச்சுறுத்தல் விடுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம், தனது ஒற்றைச் சிறகையும் இருகால்களையும் உடைத்துக் கொள்ளாது இருக்குமாறு கூறியுள்ளார்.

தேர்தல் ஆணையாளருக்கு அச்சுறுத்தல் விடுக்கும் அரசியலமைப்பு விவகார அமைச்சர் உட்பட்ட அமைச்சரவை உடனடியாகப் பதவி விலக வேண்டும். அவ்வாறு அவர்கள் பதவி விலகாவிடின் அவர்கள் தமது பதவிகளைத் துறக்கும்வரை தொடர்ச்சியான போராட்டங்களை நடத்துவோம்.

சனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதியை தீர்மானிக்க முற்படும் அரசியலமைப்பை வாசித்திராத அரசியலமைப்பு விவகார அமைச்சர்களுக்கு இனிமேலும் சம்பளம் வழங்குவதில் அர்த்தமில்லை.

இந்நாட்டில் அரச அதிகாரம் இருப்பது மக்கள் கைகளிலேயே அந்த உரிமையைப் பாதுகாக்க இருக்கும் சிறந்த வழி மக்கள் சக்தியைப் பயன்படுத்துவதாகும். மக்களின் அந்த உரிமைகளுக்கு அச்சுறுத்தல் ஏற்படுமாயின் அவர்களின் உரிமைகளைப் பறிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளபபடுமாயின் அதனைத் தவிர்க்க மக்கள் போராட்டங்களை நடத்த வேண்டியது அவசியமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# சனாதிபதித்தேர்தல் நடத்தப்படவேண்டியதன் இறுதிமுடிவை உயர்நீதிம ்றமே தீர்மானிக்கும்

### அரசியலமைப்புச் சபை உ ுப்பினர் கருத்து

(கொழும்பு)

அடுத்த சனாதிபதித்தேர்தல் எப்போது நடத்தப்பட வேண்டும் என்பது பற்றிய இறுதி முடிவை உயர்நீதிமன்றமே அறிவிக்க வேண்டுமென அரசியலமைப்புச் சபையின் உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அரசியலமைப்பில் தற்போது இருக்கும் திருத்தங்களுக்கு அமைய குழப்பகரமான நிலை ஒன்று இருப்பதாகத் தெரிவித்திருக்கும் அந்த உறுப்பினர் அதனால் அடுத்த சனாதிபதித்தேர்தல் பற்றி தேர்தல் ஆணையாளராலும் குறிப்பிட்டதொரு முடிவைச்சொல்வதில் சிக்கல்கள் இருப்பதாகக் கூறினார்.

அரசாங்ம் கூறியிருப்பதற்கமைய அடுத்த ஆண்டு நவம்பர் மாதம் சனாதிபதித்தேர்தல் நடத்தத் தீர்மானிக்கப்பட்டால் அதற்கெதிராக எவருக்கும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தொடர முடியும். அதேபோல இவ்வாண்டு நவம்பர் மாதத்தில் சனாதிபதித் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணையாளர் முடிவுசெய்வாராயின் அதற்கெதிராகவும் நீதிமன்றம் செல்லமுடியும் எனவும் அந்த உறுப்பினர் கூறுகின்றார்.

அதனால் அடுத்த சனாதிபதித் தேர்தல் நடைபெறும் திகதியை அறிந்துகொள்வதற்கு நீதிமன்றத்தை நாடவேண்டி ஏற்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994 ஆம் ஆண்டு சனாதிபதியாகப் பதவியேற்று ஆறு வருடங்கள் பூர்த்தியடைவதற்கு முன்னதாக 1999 ஆம் ஆண்டில் தேர்தலை நடத்தி அந்த ஆண்டிலேயே இரண்டாவது தடவையாக பதவிப்பிரமாணம் செய்துகொண்டமையினாலேயே இந்தப் பிரச்சினை தோன்றியுள்ளது.

# பொதுத்தேர்தல் விருப்புவாக்கு எண்ணலின் சுருக்கக் குறிப்புக்களை மீள்பரிசீலிக்கப் பணிப்பு!

(கொழும்பு)

கடந்த பொதுத்தேர்தலின்போது பதுளை மாவட்டத்தின் விருப்பு வாக்கு எண்ணலின்போது மேற்கொள்ளப்பட்ட சுருக்கக் குறிப்புகளை மீள்பரிசீலனை செய்யுமாறு உயர்நீதிமன்றம் தேர்தல் ஆணையாளருக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த நிலையில் இது தொடர்பிலான அறிக்கை எதிர்வரும் செப்ரெம்பர் 12 ஆம் திகதி நீதிமன்றில் சமர்பிக்கப்படவேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் நேற்று முன்தினம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த தேர்தலின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு தோல்விகண்ட எஸ் வேலாயுதம் தமக்கு விருப்பு வாக்கு எண்ணலின்போது பாதகம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துத் தொடர்ந்த வழக்கிலேயே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த மீள்பரிசீலனை செய்யப்படும் இடத்து தற்சமயம் பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் 6 ஆம் 8 ஆம் 9 ஆம் 11 ஆம் பிரதிவாதிகளின் பாராளுமன்ற பிரதிநிதித்துவங்களில் ஒருவரின் பிரதிநிதித்துவம் இல்லாமல் போகும் எனவே இதனை மீள்பரிசீலனை செய்வது ஏற்றுக்கொள்ள முடியாது எனப் பிரதிவாதிகளின் சட்டத்தரணிகள் தெரிவித்த வாதத்தை மன்றிற்கு தலைமை வகித்த பிரதமநீதியரசர் சரத் என் சில்வா நிராகரித்தார்.(32)

# சனாதிபதி தேர்தல் நடாத்தும் வரை மக்கள் பேரணிகள் இடம்பெறும்

## இறுதி நாள் நிகழ்வில் ரணில் விக்கிரமசிங்க

(கொழும்பு)

மக்கள் உரிமையைப் பாதுகாத்து தேர்தல் ஒன்றை நடத்தும் வரை மக்கள் சக்திப் பேரணிகளை நடத்துவோம் மேலும் இது தொடரும் என மக்கள் சக்தி நடவடிக்கையின் இறுதி நாள் நிகழ்வில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கூறியுள்ளார்.

கொழும்பு லிப்டன் சுற்று வட்டத்தில் நேற்று நடைபெற்ற ஐக்கிய தேசியக்கட்சியின் மக்கள் சக்தி நடவடிக்கையின் இறுதிநாள் பொதுக்கூட்டத்திலேயே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்; அரசியல் யாப்பின்படி ஆறுவருடங்களுக்கு ஒரு முறை சனாதிபதியை தெரிவு செய்யும் உரிமை மக்களுக்கு உண்டு. அதனை ஒருவருடத்தினால் மேலும் நீடித்தால் சனாதிபதி அந்த உரிமையை மீறுகின்றார்- மக்களின் உரிமையைக் களவாடுகின்றார் அது ஒரு பிக்பொக்கற் வேலையாகும்.

இந்நிலையில் அரசாங்கம் சட்டமா அதிபர் தேர்தல் ஆணையாளா ஆகியோருக்கு நான் தெரிவித்துக் கொள்வது என்னவெனில் மக்கள் உரிமையைப் பாதுகாத்து தேர்தல் ஒன்றை நடத்துங்கள் என்பதே. தேர்தல் ஒன்றை நடத்தும் வரை மக்கள் சக்தி நடவடிக்கை தொடரும் என்றவர் மேலும் கூறுகையில்;

மக்களின் பிரச்சினைக்கு தீர்வுகாண தேர்தல் ஒன்றினூடாக நாங்கள் அரசாங்கத்தை கையேற்றோம், யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்தினோம், 24 மணித்தியாலங்களில் மின்சாரத்தை வழங்கினோம், மீண்டும் அரசிற்கு நல்ல நிலையைப் பெற்றுக் கொடுத்தோம், வீழ்ந்திருந்த பொருளாதாரத்தைக் கட்டி எழுப்பினோம், தொழில் வாய்ப்புக்களை உருவாக்க ஆரம்பித்தோம்.

2004 ஆம் ஆண்டு முதல் நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக 45 கோடி ரூபாவைப் பெற்றுக்கொண்டோம். அவ்வாறான சந்தர்ப்பத்தில்தான் சந்திரிகா குமாரதுங்க பாராளுமன்றத்தை கலைத்தார். மக்கள் விடுதலை முன்னணியுடன் இணைந்து கூட்டமைப்பை அமைத்தார். எமது அரசாங்கத்துடன் அவரால் செயற்பட முடியாதெனக் கூறினார். யுத்தநிறுத்த உடன்படிக்கையால் நாடு காட்டிக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கூறினார்.

யுத்தநிறுத்த உடன் படிக்கையை இல்லாமல் செய்து விடுதலைப்புலிகளின் முகாம்களை இல்லாமல் செய்து சமாதானத்தை ஏற்படுத்துவதாகத் தெரிவித்தார்.

சர்வதேச சமூகத்தில் எண்ணெய் விலை அதிகரித்தாலும் அவற்றை சிறிலங்காவில் அதிகரிப்பதில்லையெனவும் பொருட்களின் விலையைக் குறைப்பதாகவும் சம்பளத்தை அதிகரிப்பதாகவும், இலட்சக்கணக்கானவர்களுக்கு வேலைவாய்ப்பை பெற்றுத்தருவதாகவும் கூறினார்.

இவை அனைத்தையும் மூன்று மாதங்களுக்குள் நிறைவேற்றுவதாகக் கூறி ஆட்சிக்கு வந்தனர். கூட்டமைப்பு அரசாங்கத்தினால் இவை எதுவும் நிறைவேற்றப்படவில்லை.

சுனாமி வந்தது மூன்று மாதங்களுக்குள் நிவாரணத்தைத் தருவதாகக் கூறினார்கள். ஆனால் ஆறுமாதங்கள் கடந்துள்ளபோதிலும் சிறிலங்காவிற்கு கிடைத்த நிதிக்கு என்ன நடந்தது என்பது தெரியவில்லை.

இங்கு நான் பேசுவது சனாதிபதியின் உரிமை பற்றி அல்ல மக்களின் உரிமை பற்றியே என்றார் ரணில்விக்கிரமசிங்க.

# போராளிகள் படுகொலையைக் கண்டித்து கிழக்குப் பல்கலை சமூகம் ஆர்ப்பாட்டம்

(மட்டக்களப்பு)

திருகோணமலை உப்புவெளியில் விடுதலைப்புலிகளின் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்தைக் கண்டித்து நேற்று முற்பகல் கிழக்குப் பல்கலைக்கழகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. பல்கலைக்கழக சமூகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் மாணவர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் ஊழியர்கள் எனப் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

சிறிலங்கா அரசாங்கமும், விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை உடனடியாக அமுல் செய்ய வேண்டும் என்றும், இந்த ஆர்ப்பாட்டத்தின்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

"சிறிலங்கா அரசே தமிழினத்தின் மீது மேற்கொண்டுவரும் அராஜகத்தை உடன் நிறுத்து"

''சிறிலங்கா இராணுவமே நிராயுதபாணிகளான போராளிகளைக் கொல்லாதே''

உட்படப்பல்வேறு வாசக அட்டைகளை ஏந்தியவாறு மாணவர்கள் உட்பட பல்கலைக்கழக சமூகம் நடத்திய வீதி ஆர்ப்பாட்டம் காரணமாக மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் குறிப்பிட்ட இடத்தில் ஒரு மணித்தியாலம் போக்குவரத்துக்கள் யாவும் தடைப்பட்டிருந்தன.

# திருமலைப்படுகொலைக்கெதிராக குடாநாட்டில் துக்கம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப்புலிகள் மீது நடத்தப்பட்ட தாக்குதல் சம்பவத்தை கண்டித்து நேற்றும் யாழ்.குடாநாடெங்கும் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

யாழ்.நகரம் உட்பட தீவு, வடமராட்சி, தென்மராட்சி, வலிகாமம் பகுதிகளிலுள்ள வீதிகள், சந்திகள் தோறும் கறுப்புக்கொடிகள் கட்டப்பட்டு சோககீதங்களும் இசைக்க விடப்பட்டிருந்தன.

பேருந்துகள், சிற்றூர்திகள், முச்சக்கர வண்டிகள் என்பன கறுப்புக்கொடிகளைக் கட்டியவாறு சேவையில் ஈடுபட்டன.

யாழ்.பல்கலைக்கழகம் உட்பட்ட கல்விக்கூடங்களில் எல்லாம் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன.

இதனால் யாழ்.குடாநாடு சோகமயமாகக் காட்சி தந்தது. (33)

### திருமலையில்....

பட்டிருந்தன.

இதன்போது போராளிகள் பெருமளவு பொதுமக்கள் பாடசாலை மாணவர்கள் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு மலர்தூவி வணக்கம் செலுத்தினர்.

இறுதியில் வித்துடல்கள் ஆலங்குளம் மாவீரர்துயிலும் இல்லத்திற்கு பாண்ட்இசை முழங்க ஊர்வலமாக எடுத்துவரப்பட்டு பூரண இராணுவ மரியாதையுடன் புனித விதைகுழியில் விதைக்கப்பட்டன.

மேலும் இராணுவத்தின் இவ் அராஜகச் செயலைக் கண்டித்து திருகோணமலையில் நேற்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது.

பாடசாலைகள், வங்கிகள் அரச அலுவலகங்கள், மாகாண சபை அலுவலகங்கள் என்பன இயங்கவில்லை. வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டிருந்தன. கடைகள், வீடுகளில் கறுப்புக்கொடிகள் பறக்கவிடப்பட்டிருந்தன. பொதுச் சந்தை மூடப்பட்டிருந்தது. வியாபாரம் செய்பவர்கள் சந்தைக்கு வரவில்லை. பேருந்து சேவைகள் ஸ்தம்பிதமடைந்தன. ஒருசில தனியார் பேருந்துகள் பேருந்து நிலையத்தில் காணப்பட்டாலும் பயணிகள் இன்மையால் சேவைகள் நடத்தப்படவில்லை.

சிறிலங்காப்படையினர் முக்கிய வீதிகளில் தடைகளை ஏற்படுத்தி வாகனங்களை மறித்துச்சோதனையிடுவதைக் காணக்கூடியதாகவிருந்தது. நகரமே வெறிச்சோடிக் காணப்பட்டது.

அன்புவழிபுரம், செல்வநாயகம்புரம் மற்றும் புறநகர்ப்பகுதிகளிலும் ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. பொலிசார் ரோந்து நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியிருந்தனர்.

இதேவேளை திங்கள் மாலை திருமலை முற்றவெளியில் வைத்துப் பொறுப்பேற்ற டிக்கான் அல்லது வேங்கை, இளம்புலி மற்றும் தேசியத் துணைப்படைவீரர் அனுஷன் குலசிங்கம் ஆகியோரின் வித்துடல்களை செஞ்சிலு வைச்சர்வதேசக்கமிட்டி பிரதிநிதிகள் திங்கள் இரவு பத்தரை மணியளவில சம்பூரில் விடுதலைப்புலிகளிடம் கையளித்தனர். செஞ்சிலுவைச்சர்வதேச குழுவிற்குச் சொந்தமான மூன்று வாகனங்களில் மூன்று வித்துடல்களும் கந்தளாய், சேருவில வீதி ஊடாக எடுத்துச்செல்லப்பட்டே கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது. (25)

### திருமலையில் இருவேறு..

தாகப் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

முதலாவது சம்பவம் நேற்று நண்பகல் அளவில் அனுராதபுரம் சந்தியில் இடம்பெற்றது. அனுராதபுரம் சந்தியில் காவலில் ஈடுபட்டிருந்த இராணுவச்சிப்பாய் ஒருவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அதில் பண்டார என்ற சிப்பாய் காயமடைந்தார். இனந்தெரியாதவர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன.

இரண்டாவது சம்பவம் நேற்று பிற்பகல் 3.30 மணியளவில் அலஸ்தோட்டம் பகுதியில் இடம்பெற்றது. அவ்வீதியால் வந்துகொண்டிருந்த கலகம் அடக்கும் பொலிசாரின் வாகனத்தினுள் குண்டு ஒன்று வீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. இதனால் பதின்மூன்று பொலிசார் காயமடைந்தனர். அவர்களில் மூவர் ஆபத்தான நிலையில் உள்ளனர். காயமடைந்த பொலிசாரில் ஒருவர் சப்இன்ஸ்பெக்டர் பெரேரா என்று பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார் (25)

### ஐ.தே.க....

வடைந்தது.

பேரணியில் கலந்துகொண்ட மக்கள் அரசிற்கு எதிராகக் கோசங்களை எழுப்பியவாறு பதாதைகளைத் தாங்கிச் சென்றனர்.

இதன்போது நாட்டில் ஏற்பட்டுள்ள வாழ்க்கைச் செலவைக் குறைக்க வேண்டும், சனாதிபதித்தேர்தலை உரிய காலத்தில் நடத்த வேண்டும் போன்ற [illegible]யங்கள் தொடர்பாகப் பேரணியில் கலந்து கொண்டவர்கள் கோசித்தனர்.

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக ஜே.வி.பி. சமர்ப்பித்த மனுமீது வெள்ளியன்று தீர்ப்பு

## உயர்நீதிமன்றில் நேற்று விசாரணை முடிவு

(கொழும்பு)

சுனாமி பொதுக்கட்டமைப்புத் தொடர்பான தனது தீர்ப்பை சிறிலங்காவின் உயர் நீதிமன்றம் எதிர்வரும் வெள்ளிக்கிழமை அறிவிக்கவுள்ளது.

சுனாமி பொதுக்கட்டமைப்பு அமுலாக்கத்தை எதிர்த்து ஜே.வி.பியின் 39 பாராளுமன்ற உறுப்பினர்களும் கையெழுத்திட்டு உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுமீதான விசாரணை நேற்று இடம்பெற்றது.

பொதுக்கட்டமைப்பு அமுலாக்கத்தை நிறுத்துவதற்கான இடைக்கால தடையுத்தரவை வழங்குவதா? இல்லையா? என்பது குறித்தே உயர்நீதிமன்றம் முடிவு செய்யவுள்ளது. இது குறித்த தீர்மானம் எதிர்வரும் வெள்ளிக் கிழமை எடுக்கப்படவுள்ளது.

பொதுக்கட்டமைப்பு அமுலாக்கத்தை எதிர்த்து ஆளும் ஐ.ம.சு. முன்னணி கட்டமைப்பிலிருந்து வெளியேறிய ஜே.வி.பி. அதற்கெதிரான செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது. அத்துடன் அதிருப்தியாளர் அணி ஒன்றையும் ஏற்படுத்தும் முயற்சிகளில் அது ஈடுபட்டு வருகின்றமை தெரிந்ததே.

### யுத்த..

வொன்று நிராயுதபாணிகளான விடுதலைப்புலிகளை சுட்டுவிட்டு வெளியேறியுள்ளனர்.

இச்சம்பவத்திற்கான முழுப் பொறுப்பையும் படையினரே ஏற்றுக் கொள்ள வேண்டும் யுத்தநிறுத்தம் வந்தபின்னர் சமாதானம் என்று கூறிக்கொள்ளும் சூழலில் விடுதலைப் புலிகள் உயிரிழப்புக்களைச் சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். அரசியல்பணிகளை மேற்கொள்வதற்காக நிராயுதபாணிகளாக வந்துள்ள விடுதலைப்புலிகள் ஆயுதங்களை மீண்டும் தூக்கிப் பணியாற்றுவதற்குத் தயாராக இருக்கின்றோம்.

யுத்தநிறுத்தம் வந்து பேச்சுவார்த்தை ஆரம்பமானது. எமது நிலைப் பாட்டில் இருந்து பல படிகள் விடுதலைப் புலிகள் இறங்கி வந்தும் தமிழ்மக்களின் வாழ்வில் மீண்டும் இயல்புநிலை ஏற்படுத்துவதற்கு மாற்றத்தைக் கொண்டு வருவதற்கு அரசு தயாராக இல்லை. தொடர்ந்தும் சமாதானத்தை பேசிக்கொண்டிருக்க முடியாது. யுத்தம் மூலம்தான் தீர்வு என்று அரசாங்கம் தீர்மானிக்குமானால் அதற்கும் நாம் தயாராக இருக்கின்றோம். யுத்தம் எம் மீது திணிக்கப்படுமானால் நாம் அதனை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டு தமிழ்மக்களின் விடுதலைக்காகப் போராடுவோம்.

மீண்டும் ஒரு தாக்குதல் எம் போராளிகள் மீது மேற்கொள்ளப்படுமாக இருந்தால் யார் வந்து தடுத்தாலும் தடைகளைத் தூக்கியெறிந்துவிட்டு எமது பாதையில் செல்வோம் எமது போராளிகள் மீண்டும் மரணத்தைச் சந்திக்கும் நிலை ஏற்பட்டால் யாராலும் எம்மைத்தடுக்க முடியாத நிலைதான் ஏற்படும்'' என்று எழிலன் கூறினார்.

திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் பேசுகையில், அரசாங்கத்திற்கு, சமாதானத்தை முன்னெடுத்துச்செல்வதில் ஆர்வமில்லாத போக்குத்தான் காணப்படுகின்றது. சமாதானத்தைக் குழப்பும் முயற்சியில் சில சக்திகள் ஈடுபட்டுக் கொண்டுள்ளன. உப்புவெளியில விடுதலைப்புலிகள் மீதான தாக்குதலில் படையினரின் பங்களிப்பும் கணிசமாக இருந்துள்ளது என்று சந்தேகிப்பதற்குப் போதுமான காரணங்களும் இருக்கின்றன. இனியும் அரசாங்கம் பாராமுகமாக இருக்க முடியாது. அரசுக்கு சமாதான முயற்சியில் ஆர்வம், அக்கறை இருக்குமானால் சமாதானத்தைக் குழப்ப முயலும் சக்திகள் மீது கடுமையான நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தவறக்கூடாது" என்றும் தெரிவித்தார். (25)


## கருத்துப்படங்கள்

**வாசகர்களிடமிருந்து கருத்துப்படங்கள் வரவேற்கப்படுகின்றன. தரமான கருத்துப் படங்கள் ஈழநாதம் நாளேட்டில் பிரசுரிக்கப்படும்.**

அனுப்ப வேண்டிய முகவரி:
**பிரதம ஆசிரியர்,**
**ஈழநாதம், கிளிநொச்சி.**


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2005 ஆம் ஆண்டு யூலை மாதம் 13 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.